# அமுதநதி

AMUTHANATHI

ISSN : 2602-8832

எண்ணுவதுயர்வு...

கலை, இலக்கிய, சமூக காலாண்டிதழ்

நதி: 02 கிளை: 03 ஜனவரி - மார்ச் . 2018

100/-



சர்வதேச நீர் தினம்
மார்ச்: 22

தமிழகத்தில் உயர் விருது

செழுமையான பாடசாலை
கலாசாரத்தை கட்டியெழுப்புவதில்
ஆசிரியர்களின் பங்கு

முற்றத்து மல்லிகை

Company Reg No:
PV-115312

# Thangamz

## Engineering (Pvt) Ltd

thangamzengneering@gmail.com
Tel: 077 8084164




27, Main Street, Cheddikulam, Vavuniya.





## இதழ் ஒரு குறள்

அதிகாரம் : நட்பியல்
குறள் : 788

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு**

**பொருள் :** பலர் முன்னே ஆடை நழுவும்போது உடனே சென்று உதவும் கை போல, நண்பனுக்குத் துன்பம் வந்த போது உடனே சென்று போக்குவதே நட்பு.

# அமுதநதி


ஆசிரியர்
**திருமதி. அ. நெலோமி**

ஆலோசகர்கள்
**திரு. அ. அன்ரனி குரூஸ்**
**திரு. ந. பார்த்தீபன்**

வெளியீடு
**வன்னியூர்க் கவிராயர்**
**கலை இலக்கியப் பேரவை**

அச்சுப் பதிப்பு
**விஜய் அச்சுப் பதிப்பகம்**
172, மில் வீதி, வவுனியா.
077 900 9491 / 024 222 5799



தொடர்புகளுக்கு

வன்னியூர்க் கவிராயர்
கலை இலக்கியப் பேரவை
இலுப்பைக்குளம், நேரியகுளம்.

விரிவுரையாளர் விடுதி
இல: 07,
வ/தேசிய கல்வியியற் கல்லூரி,
பூந்தோட்டம், வவுனியா.

077 2640202
071 6958230
077 6231859

Gmail amuthanathy@gmail.com
முகநூல்: Facebook/அமுதநதி



இச்சஞ்சிகையில் வெளிவந்திருக்கும் ஆக்கங்களுக்கு அவரவரே பொறுப்பாளிகளாவர்

விளம்பரங்களில் உள்ள விடயங்களுக்கு விளம்பரதாரர்களே உரித்தாவார்கள்


## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து...

வணக்கம், வாசகர்களே..

அமுதநதியின் 3ஆவது இதழோடும் உங்களை நான் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த இரண்டு இதழ்களிலும் நீங்கள் அமுதநதி மீது காட்டிய வரவேற்பை எண்ணி மகிழ்கின்றேன். அத்தோடு, இவ்விதழில் இன்னும்பல புதுமையான தகவல்களையும், மற்றும் அமுதநதிக்கென தனியான முகநூலையும் ஆரம்பித்திருக்கின்றோம் அவை உங்களுக்குப் பயன்படுவதோடு மறைந்திருக்கும் கலைஞர்களையும், இளம் கலைஞர்களையும் இனங்கண்டு ஊக்குவிக்க அமுதநதி விளைகின்றது. குறிப்பாக இளையவர்கள் தமது ஆளுமைகளை வெளிப்படுத்தும் களமாக மாற அமுதநதி ஆசிக்கின்றது. அந்தவகையில், கற்ற கலையை வாழ்க்கைக்கு ஆதாரமாக்கும் இளைய தலைமுறையைச்சார்ந்த 'சுதந்திர அரங்கு' நாடகக்குழுவின் முயற்சி பற்றி அறியக் கிடைத்த சந்தர்ப்பத்தில் பெருமகிழ்வும், கூடவே திறமைகளை வீணடித்துக் கொண்டிருக்கும் வாலிப வயதினர் பற்றிய வலியும் ஏற்பட்டது.

பாடசாலைக் கல்வி, தொடர்ந்து உயர்கல்வி வரை தமது பெற்றோரைச் சார்ந்து வாழும் எம்பிள்ளைகள் அதற்குப் பின்னரான காலத்திலும் உயர்தொழில், அரச உத்தியோகம், வெளிநாட்டுப் பயணத்தை நாடி தமது காலத்தை வீணடித்துக்




K.BHARANEETHARAN
Editor Jeevanathy
Editor Kadal
Malaigham, Alvai.

கொண்டிருப்பதைக் காண்கின்றோம். எதிர் பார்ப்பு ஏமாற்றமுறும் போது வாழ்க்கையின் விரக்திக்குத் தள்ளப்படுவதும், உழைக்கும் வயதை வேகத்தை தாண்டி விடுவதையும் காண்கிறோம்.

ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானவர்கள் தமக்குள்ளே புதைத்து போயிருக்கும் திறமைகளை இனங்காண்பதற்கும், வளர்ப்பதற்கும், வாழ்வாதாரமாகக் கொள்வதற்கும் தவறிவிடுகின்றனர். இயல், இசை, நடனம், சித்திரக்கலைகளில் உள்ள திறமைகளையும், கைப்பணி, தையல், உணவுத்தாரிப்புக்கலை போன்ற ஏராளமான துறைகளையும் வாழ்வாதாரத்திற்கு ஒவ்வாதவை என ஒதுக்கி விட்டு பெற்றோரையும், மற்றோரையும் நம்பிக்கொண்டு இருக்கிறோம்.

கைத்தொலைபேசி உரையாடல்களுக்குள்ளும், முகநூலுக்குள்ளும் புதைந்து போய் காலவிரயத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் எம்பிள்ளைகள் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும். சிறிதளவு மூலதனத்துடன் தமது திறமையில் நம்பிக்கைவைத்து வருமானம் ஈட்டும் முயற்சியில் நம் இளையோர் ஏன் ஈடுபடக்கூடாது? தமக்குள்ளே ஒழிந்து கொண்டிருக்கும் இயலுமைகளையும் திறமைகளையும் இனங்காண்பதும், வெளிப்படுத்துவதும், செயலாற்ற எடுக்கும் முயற்சியும் ஆர்வமுமே இதற்கான சிறந்த மூலதனமாக அமைந்துவிடும். அவர்களை அத்துறை சார்ந்த விற்பனர்கள் ஆக்குவதற்கு பெரியவர்கள் ஊக்கமளிக்க வேண்டும். எமது இளைய செல்வங்களுக்குள் இருக்கும் செல்வங்களை நாமே இனங்காண்போம் எனக்கூறிக்கொண்டு மீண்டும் அடுத்த இதழ் வாயிலாக சந்திப்பேன் என்ற நம்பிக்கையுடன்...

– ஆசிரியர்

# பொருளடக்கம்


[03] நவீன விவசாய நடவடிக்கைகளில் மரபனுத்தொழில்நுட்பம்

[07] ஒளியும் இருளும்

[13] ஈழம் தந்த கொடை

[16] உலக வெப்ப உயர்வு]

[20] முற்றத்து மல்லிகை

[24] கவிதை மழை

[28] ஈழத்தமிழ் எழுத்தாளரான அகளங்கன் ஐயாவுக்கு தமிழகத்தில் உயர் விருது

[29] மூளைக்கு வேலை

[30] நாமும் வேலைத்தளமும்

[33] மாணவர் பக்கம்

[34] காதலர் தினம் எப்படி வந்தது?

[36] வெள்ளிக்கிழமை இரவுகள்

[42] செழுமையான பாடசாலை கலாசாரத்தை கட்டியெழுப்புவதில் ஆசிரியர்களின் பங்கு

[49] நம்பினார் கெடுவதில்லை

[51] செரிமானத்திற்கு உதவும் பயிற்சிகள்

[57] மெல்லிசை கேளுங்கள்

[59] பெரிய கோயிலும் சாய்ந்த கோபுரமும்



தனிப்பிரதி: 100/-

ஒரு வருட சந்தா : 400/-
(தபாற்செலவு உள்ளடங்களாக)

# நவீன விவசாய நடவடிக்கைகளில் மரபணுத்தொழில்நுட்பம்

ஸ்ரனி அன்ரனி

அபரிமிதமான சனத்தொகைப் பெருக்கம், உலகளாவிய ரீதியில் பல்வேறு சவால்களை உருவாக்கியுள்ளது. இதில் முக்கியமான சவால் உணவுப்பற்றாக்குறையாகும். வளர்ந்து வரும் சனத்தொகைக்கேற்ப உணவை உற்பத்தி செய்வது ஒரு புறம் இருக்க மனிதன் பல்வேறு தேவைகளுக்காகவும் செழிப்பு மிக்க விவசாய நிலங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன. இது மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. அதாவது அருகிவரும் நிலத்திலிருந்து பெருகி வரும் குடித்தொகைக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாய தேவைக்குள் உலகம் தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான இக் கட்டான நிலையில் தான் பெருகி வரும் சனத்தொகைக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்வதற்காக நவீன தொழில்நுட்பமுறைகளைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டதோடு உலகம் அதற்குப் பசுமைப்புரட்சி எனப் பெயரிட்டது.



பசுமைப்புரட்சி ஆரம்பத்தில் நல்ல விளைவுகள் என இனங்காணப்பட்டாலும் காலப்போக்கில் சூழலியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பல பாதக விளைவுகளை ஏற்படுத்தியதுடன் உரவகைகள் கிருமிநாசினிகள், களைநாசினிகளின் பயன்பாடு போன்றன மனிதனுக்கும் பலவழிகளிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தின. பயன்படுத்திய உரவகைகள் என்பவற்றுடன் விருத்தியடைந்த நீர்ப்பாசனம் சதுப்பு நிலங்களையும் சவர்நிலங்களையும் உருவாக்கி விட்டன. இது விவசாய விளைபரப்பை மேலும் சிறிதாக்கியது.

இவ்வாறான பிரச்சினைகளை இழிவளவாக்கும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டது தான் மரபணுத் தொழில்நுட்பம். மரபணுத் தொழில்நுட்பம் என்பது ஒரு உயிரியின் அல்லது தாவரத்தின் பரம்பரை அலகொன்றை அல்லது மரபணு ஒன்றை மற்றொரு உயிரியின் அல்லது தாவரத்தின் பரம்பரை அலகுடன் கலத்தல் செய்து அதன்மூலம் முதலாம் உயிரியின் அல்லது தாவரத்தின் பண்புகளிலிருந்து வேறுபட்ட பண்புகளைக்

கொண்ட உயிரினம் அல்லது தாவரம் ஒன்றை உருவாக்கும் செயன்முறை ஆகும். தானிய வகைகள் காய்கறிகள், கிழங்குவகைகள், பழவகைகள் எனப் பல்வேறு மரபணு இனங்கள் தேவைக்கேற்றவாறு உருவாக்கப்பட்டு பயிரிடப்பட்டு வருகின்றன. தானிய வகைகளுள் நெல், கோதுமை, சோளம், என்பன முக்கியமானவை. தொற்றுநோய்களுக்குத் தாக்குப்பிடித்தல், நோயாக்கக் கிருமிகளுக்குத் தாக்குப்பிடித்தல், அதிக உயிர்ச்சத்துக்களை கொண்டிருத்தல் போன்ற குணாதிசயங்களைக் கொண்ட நெல்லினங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நன்மை தரும் பற்றீரியாவை உள்ளடக்கிய சோள இனம் கோதுமையையும் றையையும் மரபணு ரீதியாகக் கலந்து உருவாக்கப்பட்ட கோதுமை இனம் நிலக்கடலையின் மரபணுவை உள்ளடக்கிய சோயா இனம் என்பன குறிப்பிட்டுக் கூறக்கூடியன. இவையெல்லாம் அதிக விளைச்சலைத் தருவதுடன் ஊட்டச்சத்துக்களையும் உள்ளடக்கியவை.

மிளகாய், தக்காளி, அவரை, கத்தரி, பாகல், புடோல் போன்ற காய்கறிகளும் மரபணு முறையில் உருவாக்கப்படுகின்றன. இவை அதிக விளைச்சலைத் தருவதுடன் பருமன் கூடிய காய்களைத் தரவல்லன.

கரட், பீற்றூட், உருளைக்கிழங்கு, போன்ற கிழங்குப் பயிர்களும் பப்பாசி, கொடிமுந்திரி, (திராட்சை) அப்பிள், தோடை, மாதுளை, வாழை, மா போன்றனவும் மரபணுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்படுகின்றன. பழ இனங்களைப் பொறுத்தவரையில் பூஞ்சண நோக்கு எதிர்ப்புக்காட்டல், காலம் தாழ்த்திக் கனிதல், நசிவடையாமை போன்ற பிரதான பண்புகளைக் கொண்டுள்ளன. ஒரு தடவையில் அதிக பழங்கள் காய்த்தல் அவற்றின் பருமன் பெரிதாக இருத்தல் என்பன அவற்றின் பிரதான அனுகூலப் பண்புகளாகும்.



பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்குப் புறம்பாக கால்நடை வளர்ப்பில் மரபணுத் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு காணப்படுகின்றது. பால் உற்பத்தி, இறைச்சி உற்பத்தி, முட்டை உற்பத்தி என்பனவற்றை மேம்படுத்தும் நோக்குடன் மாடுகள் எருமைகள் ஆடுகள் பன்றிகள், பறவைகள் என்பன உருவாக்கப்பட்டுள்ளன.

ஒரு கறவைக்காலத்தில் அதிக பாலை உற்பத்தி செய்யக்கூடிய கறவையினங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன பெரும்பாலும் இவை ஒரு காலத்தில் 4000 லீற்றர் - 5000 லீற்றர் பாலை உற்பத்தி செய்யும் இயல்புடையவை. இதே போன்று குறுகிய காலத்தினுள் அதிகளவு இறைச்சியை உற்பத்தி செய்து அறுவடைக்குத் தயாராகக்கூடிய கால்நடைகள், பறவைகள் என்பன தற்போது வளர்க்கப்பட்டு வருகின்றன.

இவ்வனைத்து செயன்முறைகளும் உற்பத்தியைப் பெருக்குவதே பிரதான நோக்கமாக உள்ளன. மரபணு முறையில் புதிய இனங்களை விருத்தி செய்கின்ற போது உற்பத்தி அதிகரிப்பு மட்டுமன்றி, இன்னும் வேறு அனுகூலங்களும் விளைந்துள்ளன. நோயெதிர்ப்புத்தன்மை கொண்ட இனங்களை விருத்தி செய்ய முடிந்தமையால் நோய்களால் ஏற்படும் பாதிப்புகளில் விடுபடமுடிந்தது. பொருத்தமான சூழ்நிலைக்கேற்றவாறு பயிரினங்களையும் விலங்குகள் பறவைகளையும் உருவாக்க முடிந்துள்ளது. ஒவ்வொரு முறையும் அறுவடையை மேற்கொள்ளும் போது குறிப்பிட்ட ஒரு பகுதி விளைச்சல் சேதமடைவது தவிர்க்க முடியாததாகும். ஆனால் மரபணுத்தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட பயிரினங்களில் அறுவடையின் போது சேதமடைவது இழிவளவாக்கப்பட்டுள்ளதுடன் பழவகைகள் காய்கறிகள் என்பன கொண்டு செல்லலின் போது சேதமடைவது குறைக்கப்பட்டுள்ளமை முக்கியமானதாகும்.

இவ்வாறு மரபணுத்தொழில்நுட்பம் இனவிருத்தி செய்யப்படுகின்ற பயிரினங்கள், விலங்கினங்கள், பறவையினங்கள் என்பவற்றால் ஏராளமான நன்மைகள் கிடைக்கின்ற அதே வேளை ஏராளமான தீமைகளும் மலிந்துள்ளன. புதிய பயிரினங்களின் விலங்கினங்களின், பறவையினங்களின் வருகையானது பாரம்பரியமாக வாழுகின்ற சூழலுக்கு உரித்தானவை அழிந்துவிட்ட, அழிவின் அபாயத்தில் காணப்படும் நிலை உருவாகியுள்ளது. மரபணுத் தொழில்நுட்பத்தின் மூலம் இனவிருத்தி செய்யப்படுகின்ற போது பல்வேறு வகையான ஓமோன்கள் உட்புகுத்தப்படுவதனால் அறுவடைகளில் தங்குகின்ற இவ் ஓமோன்கள் அவற்றை உணவாகக் கொள்கின்ற போது மனித உடலுக்கு பல்வேறு வகையான தீமைகளை உருவாக்குகின்றன. மரபணு மூலமாக பிறப்பிக்கப்பட்ட விலங்குகள், பறவைகளுக்கு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட உணவுவகைகள் வழங்கப்படுகின்றன. இவற்றுள் கலந்துள்ள இரசாயனங்கள் அவற்றின் உடலில் தங்கி மனித உடலுக்கு தீங்கை விளைவிக்கின்றன. உதாரணமாக பாலுற்பத்தியை அதிகரிப்பதற்காக BST என்ற ஓமோன் உணவுடன் சேர்த்து வழங்கப்படுகின்றது. இது பாலுடன் கலந்து மனிதனுக்குப் பல்வேறு வகையான பக்கவிளைவுகளைத் தோற்றுவித்துள்ளது. இன்று அளவில் பெரிய காய்கறிகள் கிழங்குவகைகள் பழங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. இவை எல்லாம் மரபணுத்தொழில் நுட்பமே. விதையின்றிய பழவகைகள் இனமின்றிய பறவைகள் (ஆண் பெண்ணற்ற)

என இவை அனைத்தும் மனித ஆரோக்கியத்துக்குக் கேடானவை. மலட்டுத்தன்மை, இளமையில் பருவமடைதல் சிறுநீரகக்கோளாறு போன்ற வியாதிகளுக்கு இவையும் காரணமாகும்.

இவற்றுக்கு மேலாக மரபணுமூலம் விருத்தி செய்யப்பட்ட இனங்களைப் பராமரிப்பது மிகவும் கடினமானது. சாதாரண விவசாயிகளால் இவற்றை பராமரிப்பது மிகவும் கடினமானது அவர்களால் இவற்றை மேற்கொள்ள முடிவதில்லை. இதனால் சில வேளைகளில் அதிக கடன் நிலைமைகளுக்குள் விவசாயி தள்ளப்படும் அபாய நிலையும் அதிகரித்து வருகின்றது.

எனவே பின்னோக்கி நகர்வோம் பாரம்பரிய இனங்களைப் பாதுகாப்போம். அவ்வினங்களை விருத்தி செய்வோம். அவற்றின் மூலமாக உற்பத்தியைப் பெருக்குவோம். சந்ததியைப் பெருக்கும் ஆற்றலுடைய காய்கறிகள், பழவகைகள், முட்டை, இறைச்சி என்பவற்றைத் தேர்வு செய்வோம் ஆரோக்கியமாக வாழ்வோம்.


வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் முகமாக...

ஒரே ஒரு SMS தருகின்றோம் 1000/- ரீலோட்

நீங்கள் செய்யவேண்டியது,

"பத்தாயிரம்"

எனும் சொல் இச்சஞ்சிகையில் எந்த ஆக்கத்திலுள்ளது?
என்பதைக் கண்டுபிடித்து அவ்வாக்கத்தின் தலைப்பை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு உங்களுடைய பெயர், முகவரியுடன் குறுஞ்செய்தி அனுப்புங்கள்.

077 916 3679

குறித்த காலாண்டு வரைக்கும் SMS அனுப்பலாம், ஒருவர் ஒரு SMS மாத்திரமே அனுப்பமுடியும், காலாண்டின் இறுதியில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் ஐவரின் குறித்த தொலைபேசி இலக்கத்திற்கு 200 ரூபாய் பெறுமதியான ரீலோட் பரிசாக வழங்கப்படும்

ஊக்குவிப்போர்...

கூடிய தரம் !
குறைந்த விலை !

VIJAY PRINTING PRESS

இல: 172, மில் வீதி, வவுனியா. 077 900 9491 / 024 222 5799


சென்ற இதழுக்கான சரியான விடையை அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யபட்டு தளா 200ருபாய் ரீலோட் டை பரிசாகப் பெற்ற அதிர்ஷ்டசாலிகள்

- ப.கமலேந்திரன்
  கோவில்குளம், வவுனியா.
- இ.ஆனந்தி
  இலுப்பைக்குளம், நேரியகுளம், வவுனியா.
- சி.மதியரசி
  பூந்தோட்டம், வவுனியா.
- போ.விஷ்ணுராஜ்
  தோணிக்கல், வவுனியா.
- க.சிறிதேவி
  வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா.

சரியான விடை: "மாற்றமுறும் கலைத்திட்ட செயலொழுங்குகள்"

# ஒளியும் இருளும்

வளன்முகி

மூன்று வருடங்களுக்கு முன் நான்பட்ட அவலங்களின் தொடர்ச்சி இப்போது மீண்டும் என்னைத் தாக்கியது போன்று வலிக்கின்றது. அப்போது வன்னிப்பிரச்சினை உக்கிரமடைந்திருந்த வேளை மக்கள் உயிரை மட்டும் சுமந்து கொண்டு வவுனியாவை நோக்கி வந்து கொண்டிருந்த நேரம்... வவுனியாவின் பாடசாலைகள், பொதுநிறுவனங்கள் எல்லாம் அம்மக்களின் தற்காலிகத் தங்குமிடங்களாக மாற்றப்பட்ட வேளை எனது கல்லூரியும் அவர்களை நிறைத்துக்கொண்டது.

விளைவு கல்லூரியின் கல்விச்செயற்பாடுகள் ஒரு வருடத்திற்கு ஸ்தம்பிதம்.... ஊழியர்கள் தற்காலிக இடமாற்றம் திக்குத்தெரியாத காட்டில் விடப்பட்டது போல நானும் ஒரு மலைநாட்டிற்கு இடமாற்றம், அங்கிருந்து மீண்டும் இடமாற்றம்.... ஒரு வருடத்தில் மூன்று நிறுவனங்களில்.... சுற்றிச்சுழன்று மீண்டும் என் தாய்க்கல்லூரியை அடைந்த போது அழுகை முட்டிக்கொண்டு வந்தது. நிம்மதியின் பெருமூச்சு எனக்குள் புறப்பட்டது.

விட்டகுறை தொட்டகுறை என்பது போல அக்காலப் பகுதியில் நான் செய்யாது விட்ட, கரிசனையில் எடுக்காது விட்ட சில வேலைகள் மீண்டும் என்னை அவ்விடங்களுக்குத் துரத்திக் கொண்டிருந்தன. அவ்வருடத்திற்குரிய தரங்கணிப்புப்படிவம் என்னைப் பாடாய்ப்படுத்தியது. எந்த இடத்திலும் பூரணமாக வேலை செய்யாத எனக்கு ஒரு தரங்கணிப்பு... அதற்கு ஒரு படிவம்.... அதை நிரப்புவதற்கு ஒரு அலைச்சல்.... மனம் அலுத்துக்கொள்கிறது. என்றாலும் விட்டுவிட முடியாது. அது சம்பள ஏற்றத்தைப் பாதிக்கும் என்பதால் புறப்படுகின்றேன்.

ஆயிற்று முதலாவது இடத்தில் வெற்றி.... வருடத்தின் காற்பகுதிக்கான வேலைத்திட்டம் பூர்த்தி... இரண்டாவது பயணம் மன்னாரை நோக்கி... சோவென்று மழை அடித்து ஊற்றுகின்றது. பேரூந்து ஊர்ந்து செல்கிறது. ஊர்ந்து சென்ற வாகனம் இடையில் நகரமாட்டேன் என்று அடம்பிடித்து நின்ற போது தான் நான் என் முட்டாள் தனத்தை உணர்கின்றேன்.... சீ.... நேரத்தோட வெளிக்கிட்டு இருக்கலாம்.

ஒரு வழியாக வேறு வாகனம் பிடித்து, நனைந்து மன்னாருக்கு வந்தடைந்த போது அலுவலக நேரம் கடந்திருந்தது. பசியும், களைப்பு ஒன்றையொன்று வெல்லும் நோக்கத்தில் போட்டியிட நான் அந்த நிறுவனத்தின் வாசலில்

அநாதையாக நிற்கின்றேன். கதவு திறந்திருக்கின்றது. யாராவது வேலை முடிந்த பின்னரும் நிற்பார்கள் என்ற நப்பாசையில் அங்கும் இங்கும் நோட்டமிடுகிறேன். வாயில் காப்பவரைத் தவிர வேறு மனிதத் தலைகள் தெரியவில்லை. அவன் கேள்விக்குறியோடு என்னைப் பார்க்கின்றான்

"நான் வவுனியாவில இருந்து வாறன், இங்க வேலை செய்யிற ஆராவது நிற்கினமோ"

"இல்லையே எல்லோரும் போட்டினம், இனி நாளைக்குத்தான்....

ஏன் என்ன விடயம்"

சம்பந்தமே இல்லாத அவனிடம் நான் விலாவாரியாக விளக்குகிறேன்.

அவன் எனக்காகப் பரிதாபப்படுகிறான்... இதில் இருங்கோ" என்று ஒரு கதிரையை எடுத்துப் போடுகிறான்... என்ன செய்யலாம் என்று தனக்குள் பேசிக்கொள்கிறான்.

ஒரு வாயில் காப்போனின் கரிசனை என்னை நெகிழ வைக்கின்றது.

"இந்த போமுக்கு எல்லாம் பொறுப்பான சேர் இருக்கிறார்.

அவற்ற ரெலிபோன் நம்பர் தாறன் கதைக்கிறீங்களா ?" எனக்குள் வயிற்றில் குபுக்கென்று பால் வார்த்தது போல இருக்கிறது. ஒரு குழந்தையின் குதூகலத்தில் உள்ளம் துள்ளுகிறது. "ஓம் தாங்கோ.... தாங்கோ..."

அவன் தந்த இலக்கத்தை அவசரமாகத் தொடர்புகொள்கிறேன்.

றிங்....றிங்... ஏதோ ஒரு ஆங்கிலப்பாடல் பின்னணியில் ஒலிக்க றிங் போகிறது... சட்

"ஹலோ"

கர்ண கண்டூரமான குரல்... நான் தடுமாறுகிறேன். எனக்கு ரெலிபோன் நாகரிகம் மறந்து போகிறது

"நீங்க ரஞ்சிதன் சேரா ?"

"நீர் யார் கதைக்கிறது.....?"

நான் நாக்கைக் கடித்துக் கொள்கிறேன், என் முன்

தலையில் என்கை தானாகவே ஒரு குட்டுவைத்துக்கொள்கிறது.

"நான் சந்திரா... வவுனியா கல்லூரியில் வேலை செய்யிறன்"

"ம்... என்ன அலுவல்?

மீண்டும் அந்தக் குரலின் கடூரம் என்னைத் தடுமாற வைக்கிறது சமாளிக்கிறேன்.

நான் இரண்டு வருடத்திற்கு முதல் மூன்று மாதம் இங்க மன்னாரில் வேலை செய்தனான். அப்ப தரங்கணிப்புப் படிவம் நிரப்பேல்ல சேர்... இப்ப நான் ஒரு போம் எடுக்க முடியுமா...?

மறுபக்கத்தில் குரல் வெடித்துக் கிளம்புகிறது.

"உம்ம எனக்குத் தெரியாது பதினெட்டு வருசமா நான் இங்க வேலை செய்யிறன் ஒரு நாளாவது உம்ம பார்க்கயில்ல, கதைக்கயில்ல... நான் எப்படி உமக்கு சைன் பண்ணுறது?"

என்ன இவர் சைன் பண்ணுற கதை கதைக்கிறார் இவன் யாருடைய ரெலிபோன் நம்பரைத் தந்து தொலைத்தான்.... சில வேளை புதுசா வந்த மேலதிகாரியாக இருக்குமோ.... நான் சிக்கலுக்குள் மாட்டிவிட்டது புரிகிறது. சாதாரண அலுவலர் ஒருவரிடம் பெறக்கூடிய படிவத்தை மேலதிகாரியிடம் கேட்டுவிட்டதன் விளைவு என் காதுகளில் பட்டாசு வெடித்துக்கொண்டிருக்கிறது. இனி ஒன்றும் செய்ய முடியாது. சமாளிக்கத்தான் வேணும்.

"சேர் நான் திணைக்களத்திலே வேலை செய்யேல்ல சென்ரரில் தான் செய்தனான்...."

எப்படியெண்டாலும் எனக்குத் தெரியாது... நீர் என்ன செய்தனீர் ? என்ன செமினார் வைச்சனீர்? எதற்காக என்றாலும் அனுமதி எடுத்தனீரா? மீற்றிங்கிற்கு வந்தனீரா? நான் வைக்க முடியாது

நான் தொடருகிறேன்....

"சேர் எனக்கு போம் மட்டும் தந்தால் போதும் நான் வேலை செய்யேக்க அரவிந்தன் சேர்தான் இருந்தவர்" என் விளக்கங்களைக் கேட்கும் அளவுக்கு அவருக்கு பொறுமை இருக்கவில்லை போல...

"யார் இருந்தால் என்ன, எனக்கு அப்ப உம்மைத் தெரியாது.."

தொடர்ந்து என் செவிப்பறை கிழிந்து கொண்டிருக்கிறது. கூடவே ஆத்திரமும் அவமானமும்... பேசிக்கொண்டிருக்கும் போதே தொலைபேசியை நிறுத்தி என் கோபத்தை வெளிப்படுத்தி அவமதிப்புச் செய்யலாமா என்று என் மனம் கொதிக்கின்றது. இல்லை அந்த உயர் அதிகாரியின்



வார்த்தைப் பிரயோகங்களைக் கணக்கிடும் ஆவல் எனக்குள் பீறிடுகிறது. இது குரைத்து விட்டு தானாக ஓய்ந்து விடும் என்ற எதிர்பார்ப்பில் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

"வள்... வள்... வள்..."

என் காதுகளில் குரைப்புச் சத்தம் மட்டுமே கேட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு கட்டத்தில் நின்று விடுகிறது.

அப்பாடா.... மழையும் புயலும் ஓய்ந்து விட்ட அமைதி. எனக்குள், சினம் பொங்கி வழிகிறது. பதவி கிடைத்தால் கண்டபடியெல்லாம் மற்றவர்களைத் திட்டலாம் என்ற அனுமதியையும் பெற்று விடுகிறார்களா? என்னைத் திட்டுவதற்குச் செலவிட்ட நேரத்தில் எத்தனையோ விபரங்களைச் சேகரித்திருக்கலாமே எத்தனை மாதம் வேலை? எங்கு வேலை? எத்தனை செயமலர்வு? எத்தனை மீற்றிங்?

இந்தக் கேள்விகளையெல்லாம் அந்த அதிகாரி என்னைத் திட்டுவதற்காகத் தானே கேட்டார். தவிர அதற்கான பதிலைக் கூறுவதற்கும் கூட சந்தர்ப்பம் தரவில்லையே. என்னை அவருக்குத் தெரியாது என்பதற்காக நான் இவற்றையெல்லாம் செய்யவில்லை என்று அர்த்தம் கொண்டு விடலாமா?

உம்மை எனக்குத் தெரியாது பழையவரிடம் தான் சைன் பண்ண வேண்டும் என்று ஒரு வார்த்தையில் முடிக்க வேண்டிய விடயத்தை இப்படி தீட்டி முழக்கியிருக்க வேண்டியதில்லையே . அந்த முகம் தெரியாத அதிகாரி மீது மானசீகமாக சேற்றை அள்ளி வீசுகிறேன். அவரின் பதினெட்டு வருட சேவையில் ஒரு அறிமுகம் இல்லாத நபரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற இங்கிதம் கூடவா தெரியாமல் போயிருக்கும்? வசீகர வலுவாண்மை இல்லாத, சமநிலை ஆளுமை இல்லாத ஒரு அதிகாரி எப்படி தனது ஊழியர்களை நிர்வகிக்க முடியும்? எனக்குள் ஆயிரம் கேள்விகள் தொலைபேசி இலக்கம் தந்த ஊழியர் என் முகத்தை ஆவலோடு பார்க்கிறார்.

"அவருக்கு என்னைத் தெரியாதாம்"

ஒரு சொல்லில் முடித்து விட்டு ஓய்வுபெற்ற பழைய மேலதிகாரியைத் தேடி அவர் இல்லத்திற்குச் செல்கின்றேன். வழி நெடுகிலும் பலத்த யோசனை. அவருக்காவது நினைவு இருக்குமா? இருக்காது இரண்டு மாதங்கள் தானே... மறந்திருப்பார்.

கதவு திறந்தே கிடக்கிறது. சாய்மனைக் கதிரையில் இருந்து எதையோ வாசித்துக் கொண்டிருக்கிறார்... எழுந்து வெளியே வருகிறார்... அவர் பார்வையில் என்னை யார் என்று தேடும் சந்தேகம் புருவ நெறிப்பில் தெரிகின்றது.

"நான் சந்திரா சேர்.... வவுனியாவில இருந்து வாறன்"

"ஆ ... உள்ள வாங்கோ.... சொல்லுங்கோ பிள்ள"

"நான் முந்தி இங்க இரண்டு மாதம் சென்ரறில் வேலை செய்தனான் சேர்"

"என்ன பேர் சொன்னீர்"

"சந்திரா சேர்"

"ஓம் ஓம் சந்திரா தொடர்ந்தும் இங்கேயே வேலை செய்யுங்கோ எண்டு சொன்னன் மாட்டன் எனக்கு ஓடினனீர் தானே...."

சிரிக்கிறார்

அவர் அடையாளம் கண்டு கொண்டது நிம்மதியாக இருக்கிறது விடயத்தைச் சொல்கிறேன்

"வேலை முடிச்சாப்பிறகு வந்தால் கஸ்டம் தானே....ம்.... நாளைக்கு போம் எடுத்து நிரப்பிக்கொண்டு வாங்கோ சைன் பண்ணித் தாறன்."

ஒரு அலைச்சல் இருக்கு.... கூறி விட்டுச் சிரிக்கிறார்.

"பரவாயில்லை சேர் வாறன்... என்னில பிழைதானே"

சற்று நேரம் யோசிக்கிறார். "பொறுங்கோ வாறன் என்ர பைலுக்க ஒரு போம் கண்ட ஞாபகம். இருந்தால் உமது அதிஸ்டம்"

கூறிவிட்டு உள்ளே செல்கிறார்.

நான் வேண்டாத தெங்வங்களை எல்லாம் வேண்டிக்கொண்டு நிற்கின்றேன். கடவுளே கடவுளே இருக்க வேணும்

என் வேண்டுதல் பலிக்கிறது. அவர் கையில் தரங்கணிப்புப் படிவம்... "உமக்கு அதிஸ்டம் இருக்கு இதை இப்ப நிரப்பித்தந்தாலும் சரி அல்லது கொண்டு போய் நிரப்பிற்று அனுப்பி விட்டாலும் சரிதான்" சிரிப்போடு கூறுகிறார்.

"இல்ல சேர் நான் இப்பவே நிரப்புறன்..."

அடுத்த பத்தாவது நிமிடத்தில் எல்லாவற்றையும் நிரப்பி அவரிடம் கையெழுத்தையும் பெற்றுக்கொள்கிறேன்.

நன்றியோடு விடைபெற்றுக்கொள்கிறேன். வவுனியாவுக்கான கடைசி பஸ்சில் ஏறிக்கொள்கிறேன்.

வசதியான இருக்கை கிடைத்து விடுகின்றது. ஆசுவாசமாக அமர்ந்து நிம்மதிப் பெருமூச்சு விடுகிறேன். கூடவே நிறைவும் குறைவும், மலையும் மடுவும், உயர்வும் தாழ்வும், இருளும் ஒளியும் என்று எதிரும் புதிருமாக என் சிந்தனை ஓடிக்கொண்டிருக்கிறது. வெளியே இருட்டத் தொடங்கிவிட்டது. ஆனால் எனக்குள்ளே மன அழுத்தம் மறைந்து மெல்ல மெல்ல ஒளிபரவுமாப்போல் உணர்கிறேன்.

# ஈழம் தந்த கொடை

## கவியெழில் கண்ணையா

**ந.பார்த்தீபன்**

நானும் சமாதானமும் என்ற கட்டுரையை எழுதி 1986ஆம் ஆண்டு சர்வதேச சமாதான ஆண்டை முன்னிட்டு பீக்கிங் வானொலியின் தமிழ்ப்பிரிவு நடாத்திய கட்டுரைப் போட்டியில் முதலாமிடத்தை பெற்றுத் தன் எழுத்துத்திறமையை இலக்கிய உலகிற்கு எடுத்துக்காட்டிய முனுசாமி இராமையா என்ற இயற்பெயருடன் பிறந்தவர் என்பது நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியதே.

பலருக்கு புனைபெயர்கள் தான் நிலைத்து நிற்கும் அகளங்கன், தெணியன், மேழிக்குமரன் என்பதெல்லாம் புனைபெயர்களே. அதுபோல் கண்ணையா என்றால் தெரியாதவர்கள் குறிப்பாக வவுனியாவில் தெரியாதவர்கள் இல்லை என்று சொல்லுமளவிற்கு இராமையா கண்ணையாவாக வலம் வந்தார்.

1942இல் பிறந்த இவர் தனது 20 ஆவது வயதில் 1962இல் தனது முதலாவது கவிதையுடன் இலக்கிய உலகில் காலடி பதித்தார். இருக்கும வரை எழுதிக்கொண்டிருந்த இவர் இவ்வுலகைவிட்டுச் சென்று விட்டார் என்பது இலக்கிய உலகிற்குப் பெரும் இழப்புத்தான் என்பதை இவரது கவிதைகள் கட்டுரைகளைப் படித்தவர்கள் புரிந்துகொள்வர்.

இவர் எழுதிய ஒன்றுபட்ட உள்ளங்கள், அபூர்வ சகோதரர்கள், புரோக்கர் நல்லையா என்பன இவர் எழுதிய நாடகங்களுள் பிரபல்யமானவை குறிப்பிட்டுச் சொல்லக்கூடியன. பேச்சுத்தமிழில் யதார்த்த ரீதியான, மண் வாசனை மிக்க, சமூக மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய நாடகங்கள் படைத்தவர் கவியெழில் கண்ணையா.

மன்னார் மாவட்டத்திலே மாந்தையிலே பிறந்த இவர், வவுனியா தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயத்திலும், சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் கல்வி கற்றுள்ளார். வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளராகத் தொழில் புரிந்துள்ளார். கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றியதாலே ஒற்றுமை, கூட்டுறவே நாட்டுயர்வு போன்ற விடயங்களில் அதிக ஈடுபாடு கொண்டார்.

1995ஆம் ஆண்டு மாத்தறை மக்கள் சமாதான அமைப்பு நடத்திய கவிதைக்குப் பரிசு கிடைத்தது என்பது குறிப்பிடக்கூடியது. 1995ஆம் ஆண்டு வவுனியா நகரசபை இவரைப்பாராட்டி கவியெழில் என்ற பட்டத்தை வழங்கித் தன்னைக் கௌரவித்துக்கொண்டது. வவுனியாவில் நடைபெற்ற பல கவியரங்குகளில்

பங்குபற்றி தனது கவிதை வாசிப்பின் மூலம் சபையினரைச் சிந்திக்கவும் சிரிக்கவும் செய்தார் என்பதை யாவரும் அறிவர்.

றேடியோ வெரித்தாஸ் கவிதை நிகழ்வுகளில் 100 இற்கு மேற்பட்ட கவிதைகளை எழுதி அக்கால கவிதை ரசிகர்களுக்கு பரிச்சயமாகிச் சர்வதேச ரீதியில் அறியப்பட்டார். இவர் எழுதிய கவிதைகளின் தொகுப்பு 1993ஆம் ஆண்டு கவிதைப்பூக்கள் என்ற பெயரில் மலர்ந்து மணம் பரப்பியது. இது வவுனியா முத்தமிழ் கலாமன்ற வெளியீடாக வெளிவந்துள்ளது.

1997இல் தனி மூலிகையின் மருத்துவ சாதனை என்ற வைத்தியநூல் வவுனியா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் வெளியிடப்பட்டது. 15.05.2004 இல் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏழாம் ஆண்டு நிறைவு விழாவில் கலாபூசணம், கவிஞர் முனுசாமி கந்தையா அவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். மாருதம் இதழ் 5 1இல் இவரது இலக்கிய கலைப்பணி பற்றிக் குறிப்பிட்டுள்ளது. இருக்கும் வரை இலக்கிய பணிபுரிந்த இவர் இன்று இல்லை என்பது இலக்கிய உலகிற்கு பேரிழப்பன்றே கூற வேண்டும்.

## நோயற்ற வாழ்வுக்கு

1. அரிசி, உருளைக்கிழங்கு போன்ற மாச்சத்துப் பொருட்களை குறைக்கவும், பதிலாக கோதுமை எடுத்துக் கொள்ளலாம்.
2. கடுமையான இருமல் இருந்தால் 3 கப் தண்ணீருடன் வெற்றிலையையும், மிளகையும் போட்டு கொதிக்க வைத்து குடித்து வரவும்.
3. பல் வலி குறைய துளசி இலை 2, கொஞ்சம் உப்பு மற்றும் மிளகுத்தூள் ஆகியவற்றை வலி இருக்கும் இடத்தில் வைத்து அழுத்தி வரவும். வலி குறையும்.
4. சருமத்தில் உள்ள சிறு தழும்புகளைப் போக்க குளிக்கும் நீரில் துளசி இலைகளை போட்டு குளிக்கவும். விரைவில் தழும்புகள் மறையும்.
5. குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல் மற்றும் இருமலுக்கு நீருடன் தேனைக்கலந்து கொடுத்தால் விரைவில் இருமல் நிற்கும். காய்ச்சல் குறையும்.
6. கரட் மற்றும் தக்காளிச்சாற்றுடன் கொஞ்சம் தேன் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் உடல் வலிமை பெறும்.
7. வயிற்றுப் போக்கை உடனடியாக நிறுத்த கொய்யா இலைகளை மென்று தின்றால் போதும்
8. தினமும் காலையில் முழுதாக வளர்ந்த 10-12 கருவேப்பிலைகளை சாப்பிட்டு வரவும், 3-4 மாதங்களில் உடல் பருமனில் மிகுந்த மாற்றத்தை காணலாம்.

# பொறுக்கியின் பொறுக்கல்

அடிமுடி தேடினாலும்
அகராதியைப் புரட்டினாலும்
அர்த்தத்தை முழுமையாக
அறிய முடியாத
உயிர்ச்சித்திரம்
அம்மா

புகழ் எம்மிடம் இயல்பாக
வரவேண்டும்
புகழைத் தேடிச் செல்லல்
பொருத்தமானதல்ல

பெற்றோரை மதிப்பவன்
வேறு பிரார்த்தனைகள்
செய்ய வேண்டியதில்லை
பிறருக்கு உதவும் கைகள்
பிரார்த்தனை செய்யும்
உதடுகளை விட
மேலானவை.

வரலாற்றைப் படித்துவிட்டு
வரலாற்றிலிருந்து பாடம் கற்காத
வாழ்க்கை மனிதனுடையது
தோல்வியிலிருந்து எதையும்
கற்றுக்கொள்ளவில்லை என்றால்
அதுதான் உண்மையான
தோல்வி

தட்டிப் பறித்தவன்
வாழ்ந்ததில்லை
விட்டுக் கொடுத்தவன்
விழ்ந்ததில்லை
வெறுப்பது யாராக இருந்தாலும்
நேசிப்பது நீங்களாக
இருக்கலாம்.

தடம் பார்த்து
நடப்பவன் மனிதன்
தடம் பதித்து
நடப்பவன்
மாமனிதன்.

வருமானம்
செருப்புப் போன்றது
அளவு குறைந்தால்
கடிக்கும்
அதிகரித்தால்
நடக்க முடியாது

*இலக்கியப் படைப்பாளியை*
*அவர்களின் படைப்புக்கள்*
*அவர்கள் இறந்தும்*
*இறவாப் புகழ்*
*கொண்டு வாழ்விக்கின்றன.*

அறிவு இல்லாதது
பலவீனமானது, பயனற்றது
அனால்
கண் இல்லாத அறிவு
ஆபத்தானது,
அஞ்சத்தகுந்தது.

நல்ல மனச்சாட்சி
மென்மையான தலையணை
கருணை நிறைந்த இதயம்
கடவுளின் ஆலயம்
மனச்சாட்சிக்குத் தெரியாமல்
எந்த வஞ்சகமும் செய்ய
முடியாது
தன்னெஞ்சு பொய்யற்க.

*நம்பிக்கை ஒன்று*
*நம்பிடம் இருந்தால்*
*இருட்டில் நடந்தாலும்*
*இமயம் வரை செல்லலாம்*
*நெஞ்சில் மனஉறுதியும்*
*தெளிவான சிந்தனையும்*
*உறுதியும் வேண்டும்.*

# உலக வெப்ப உயர்வு

திருமதி.சிவகௌரி சயந்தன்

சூரியனிடமிருந்து குறுகிய அலைநீளம் கொண்ட கதிர் வீச்சுகளாக பூமியை வந்தடையும் வெப்பக்கதிர்களில் நீண்ட அலை நீளம் கொண்ட மீள்கதிர் வீச்சுகளாக மாறிய ஒரு பகுதி, மீண்டும் விண்ணை நோக்கி தெறிக்கும் போது, வாயு மண்டலத்தில் காணப்படும் பசுமையக வாயுக்கள் அந்த வெப்பக் கதிர்களை காற்று மண்டலத்தைக் கடந்து விண்ணுக்குள் செல்ல முடியாதபடி தடுத்து நிறுத்துவதனால், வாயு மண்டலத்தில் வெப்பம் அதிகரித்து செல்கிறது. இதனால் பூமியின் வெப்பம் அதிகரிக்கின்றது. இது "பச்சை வீட்டு விளைவு" என அழைக்கப்படும்.

**“பசுமையக வாயுக்கள்”** என குறிப்பிடப்படும் வாயுக்களான காபன் டை ஒக்சைட் (CO2) மீதேன், குளோரோ புளோரோ காபன், நைட்ரஸ் ஆக்சைட், நீராவி போன்றவை வளிமண்டலத்தில் சரியான அளவில் இருக்கும் போது பூமியின் வெப்பநிலை சீராக காணப்படும். ஆயினும் கரி, எண்ணெய், இயற்கை வாயு போன்றவற்றை அதிளவில் பயன்படுத்தும் போது இவ்வாயுக்கள் அதிகளவில் வெளியேற்றப்படுவதால் பச்சை வீட்டு விளைவு ஏற்படுகிறது.

**“காபன் டை ஒக்சைட்”** பசுமையாக வாயுக்களில் வளியில் பெருமளவு இருப்பது இவ்வாயுதான். உலகில் 50% வெப்ப உயர்வு இதன் மூலம் ஏற்படுகிறது. வாகனங்கள், தொழிற்சாலைகளில், பயன்படுத்தப்படும் எரிபொருட்கள் மூலம் வெளியேற்றப்படுகிறது. மின் உற்பத்திக்காக அனல்மின் நிலையங்களில் பெருமளவு கரிகள் பயன்படுத்தப்படும் போதும் காடுகள் பெருமளவில் தீ வைத்து அழிக்கப்படும் போதும் இவ்வாயு வளிமண்டலத்திற்கு பெருமளவில் வெளியிடப்படுகிறது.

**“மீதேன்”** இவ்வாயு 30-40 மடங்கு அதிகமான வெப்பத்தை வெளியேறாமல் தடுத்து நிறுத்தி விடுகிறது. பூமியின் அடியிலிருந்து வெளிவரும் இயற்கைவாயு அநேகமாக மீதேன் வாயுவாகத்தான் உள்ளது. எண்ணைக் கிணறுகளிலிருந்து வெளிப்படும் இயற்கை எரிவாயு, சமையல் எரிவாயு போன்றவை வளியில் மீதேன் அளவை அதிகரிக்கின்றன. சுரங்கங்களிலிருந்து கரி வெட்டி எடுக்கும் போது, கச்சா எண்ணை சுத்திகரிக்கும் போது, சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர், சோளப்பயிர்

போன்றவற்றை எரிக்கும் போது, கழிவுகள் அழுகும் போது மீதேன் வாயு வெளிப்படுகிறது.

**"குளோரோ புளோரோ காபன்"** இது மிகவும் சக்தி வாய்ந்த வாயு. 10000-20000 மடங்கு வரை அதிகவெப்பத்தை பூமியிலிருந்து வெளியேறாதபடி தடுத்து விடுகிறது. குளிரூட்டி, குளிர்சாதனப்பெட்டிகளிலிருந்து இவை வெளியேற்றப்படுகின்றன. பலவிதமான பிளாஸ்ரிக் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் இவை வெளியேற்றப்படுகின்றன. இவ்வாயு புவியின் வெப்பநிலையை அதிகரிக்கச் செய்வதோடு சூரியனின் புறஊதா கதிரின் தாக்கத்தில் இருந்து பூமியைப் பாதுகாக்கும் ஓசோன் வாயுவையும் அழித்து வருகின்றது. இவ்வாயு 75-100 ஆண்டுகள் வரை தொடர்ந்து செயற்படும் திறனைக் கொண்டது.

**"நைட்ரஸ் ஆக்சைடு"** இது விளை நிலங்களில் பயன்படுத்தப்படும் இரசாயன உரங்களிலிருந்தும், காடுகள எரித்து அழிக்கப்படும் போதும் உருவாகின்றது. இவ்வாயு உலக வெப்ப உயரவுக்கு காரணமாக உள்ளதோடு வளியிலுள்ள நீருடன் கலந்து நைட்ரிக் அமிலமாக மாறி அமில மழையை உருவாக்கு கின்றது.



**"நீர் ஆவி"** வளி மண்டலத்தில் இருந்து வரும் நீர் ஆவி, நுண்ணிய கரித்துாள் போன்ற துகளுருவங்களை

கொண்ட அடர்த்தியான புகை போன்றவைகளும் பூமியிலிருந்து வெளியேறும் வெப்பத்தை தடுத்து விடுகின்றன.

இதன் காரணமாக உலகின் வெப்பநிலையானது தொடர்ந்து அதிகரித்துச் சென்ற வண்ணம் உள்ளது. இதன் விளைவாக பருவ நிலைகளில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்படும். ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி, சீரற்ற காலநிலை, இயற்கை அனர்த்தங்கள், அழிவுகள் என்பன ஏற்படுவதோடு புவி மேற்பரப்பில் பாரியளவிலான புயல் காற்றுக்கள் சூறாவளிகள் ஏற்படவும் வாய்ப்புண்டாகும். வெப்ப வலயங்களில் வெப்பம் மேலும் அதிகரிக்கும் போது குளிர் பிரதேசங்களிலிருந்து அதிக அழுத்தம் கொண்ட குளிர்காற்று வீசுவதால் பனிமழையை தோற்றுவிக்கும். வெப்ப உயர்வு அழிவைத்தரும் புயல் காற்றுக்களை உருவாக்குவதோடு ஆறுகளில் வெள்ளப்பெருக்குகளை உருவாக்கி அழிவை ஏற்படுத்தும்.

அது மட்டுமன்றி வெப்ப உயர்வின் காரணமாக நீரின் வெப்பம் அதிகரிக்கும் போது அதனுடைய கொள்ளளவும் அதிகரிப்பதனால் கடல் நீர்மட்டம் உயரும். துருவப் பிரதேசத்தில் காணப்படும் பனிப்பாறைகளும் கடலில் மிதந்து வரும் பனிமலைகளும் உருகுவதால் கடல் நீர் மட்டம் வேகமாக உயரும். இதனால் கடற்கரைக்கு அருகிலுள்ள தாழ்வான நிலப்பகுதிகள் அனைத்தும் கடல் நீரில் மூழ்கி விடும். அத்தோடு உலகில் பெருமளவிலான முக்கிய நகரங்கள் கடற்கரை ஓரமாக அமைக்கப்பட்டிருப்பதால் அவை நீரில் மூழ்கும் போது உலகப் பொருளாதாரம் சீர்குலையும் நிலை ஏற்படும். உலக நாடுகளிலுள்ள சுற்றுலா தலங்கள் யாவும் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் அமைக்கபட்டிருப்பதால் கடல் நீர் மட்டம் உயரும் போது இவை அழிந்து விடும் என்பதால் சுற்றுலாத்துறை வருமானம் பாதிப்பிற்குள்ளாகும். கடல் பிரதேசத்தில் வெப்பநிலை வித்தியாசத்தால் உருவாகும் நீரோட்டங்கள் அதிக வெப்ப உயர்வால் பாதிப்படைவதோடு கடல் வாழ் உயிரினங்களையும் பாதிக்கும்.

புவி வெப்ப உயர்வின் காரணமாக ஆறுகளிலும் ஏரிகளிலும் இருக்கும் நீர் வேகமாகக் குறைந்து வற்றிவிடும். இதனால் நிலத்தடி நீர் வளமும் குறைந்து விடும். குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதோடு விளைச்சலுக்கு போதுமான நீர் கிடைக்காததால் உணவு உற்பத்தி வெகுவாக குறைந்து விடும். வெப்ப உயர்வின் காரணமாக விளைநிலங்கள் பாலை நிலங்களாக மாறிவிடும். காடுகளிலுள்ள மரங்கள் ஈரப்பசை இழந்து காய்ந்து உலர்ந்து விடும். தாவரங்கள், விலங்குகள் என்பன அழிந்து போவதோடு மனித இனம் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படும். உலக வெப்பம் உயரும் போது பகலில் யாரும் வெளியில் செல்ல முடியாத நிலை உருவாகி விடுவதால் சூரியன் மறைந்த பின்னர்தான் வேலை நேரம் தொடங்கும் நிலை ஏற்படும்.

ஆகவே இவ்வாறான பாதிப்புக்களிலிருந்து மனித குலத்தை பாதுகாப்பதற்கு உலக வெப்ப உயர்வினை நாம் உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு முதலாவதாக வாகனப் பாவனை மற்றும் தொழிற்சாலைப் பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும். அவற்றிலிருந்து வெளியேறும் வாயுக்களை சுத்திகரித்த பின் வளி மண்டலத்திற்கு வெளியேற்றும் படி செய்ய வேண்டும். அதோடு மக்கள் தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் அவர்களது செயற்பாடுகளின் போது வெளியேறும் பசுமையக வாயுக்களை குறைப்பதோடு ஆடம்பர வாழ்க்கையை மாற்றி எளிமையாக வாழ்வதன் மூலமும் அத்தியாவசியப் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்வதன் மூலமும் அவற்றினைப் பயன்படுத்துவதன் மூலம் வெளியேறும் கழிவுகளை உரிய முறையில் சுத்திகரித்து வெளியேற்றும்படி அறிவுறுத்துவதன் மூலமும் உலக வெப்ப உயர்வினைத் தடுக்கலாம். இவை அனைத்தையும் விட பிரதானமானது காடழிப்பதை தடுப்பதோடு காடுகளை மீள் உருவாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் வெப்ப உயர்வினை பெருமளவில் கட்டுப்படுத்தலாம். இயற்கை சமநிலையை குழப்பாது இயற்கையோடு இயைந்து வாழ்ந்தால் எம்மோடு எம் சந்ததியினரும் இப்பூமி தன்னில் இன் வாழ்வதனை பெற்றிடலாம்.

# Saji's Watawela Spring Water (PVT) Ltd

GMP
GOOD MANUFACTURING PRACTICE

SLS
894

# Nelu

*Bottled Drinking Water*

Ministry of Health Reg. No: CFA/BW/23/2012/11



**Available in:**
**500ml, 1000ml, 1500ml,**
**5 Liter, 19 Liter Bottles**

Distributor:

**K.R.R. Engineering Contractor and Supplier (PVT) Ltd**

118/6, Poonthoddam Road, Vavuniya.
Tel: 024 2222990 / 077 3727316

Source: Tube well, Sajinda Estate, Watawala. Factory: Sajinda Estate, Watawala, Sri Lanka.



SUNBEAM
SUNBEAM
CREATIONS
BANNER
Rs. 45/=
COLOUR PRINT
Rs. 15/=
CONDITIONS APPLY
#52, Bus Stand Complex, Vavuniya 077-2633402 / 077-7166601
www.sunbeam.lk / sunbeamvavuniya@gmail.com

## அண்மைக்காலத்தில் வெளிவந்து எம்கரம் கிடைத்த நூல்கள்



**“மருந்தில்லா மருத்துவம்”**
**ந.சிவசுப்பிரமணியம்**
விலை: 250/-




**“நானாக நீயானாய்”**
**ஹபீலா புஹாரி**
விலை: 220/-

**எழுத்தாளர்களிடமிருந்து தரமான கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் மற்றும் மாணவர் பகுதிக்கான ஆக்கங்கள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன...**





உலகெங்கும் அதிக அளவில் மது குடிப்பதால் 10 வினாடிகளுக்கு ஒரு நபர் உயிரிழப்பதாக உலக சுகாதார மையம் அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளது.

மதுபழக்கம் தொடர்பான உலக சுகாதார மையத்தின் இந்த புதிய அறிக்கையில் கடந்த 2017 ஆம் ஆண்டு அதிக அளவில் மது குடித்ததால் 3.3 மில்லியன் மக்கள் உயிரிழந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மது குடிப்பதால் 10 வினாடிக்கு ஒரு நபர் உயிரிழப்பதாக அதிர்ச்சித் தகவல்**



# முற்றத்து மல்லிகை



## சிற்பக்கலைஞர் தர்மலிங்கம் தனரெட்ணம்

நேர்கண்டவர்: அ.அன்ரனிகுரூஸ்

புதுக்குளம் பாடசாலைக்கு அருகாமையில் நின்றுகொண்டு வீதியில் சென்றுகொண்டிருந்த இளைஞன் ஒருவனை மறித்துக் கேட்கின்றோம். "தனாவின் வீடு எது?" அவ்விளைஞன் தெரியாது என தலையசைக்கும் நிலையில் சிற்பங்கள் செய்பவர் என்ற தகவலைத் தெரிவித்ததும் மிகத்தெளிவாக வீட்டிற்குச் செல்லும் குறிப்புகளைக் கூறுகிறார்.

வீதியிலிருந்து சற்றே உள்ளொடுங்கிய அமைதியான பழைய காலத்து வீடு. சளசளத்த உடம்புடன் புன்னகை தவழும் முகத்துடன் 34 வயது இளைஞன் தர்மலிங்கம் தனரெட்ணம். முன்பள்ளி ஆசிரியையான அவர் மனைவி பிரியநந்தினி. சுடச்சுட நேீர் வருகிறது. சுற்றும்முற்றும் எங்கள் கண்கள் நோட்டமிடுகின்றன. ஒரு சிற்பி வாழ்வதற்கான எந்த அறிகுறிகளையும் அங்கு காணவில்லை. சந்தேகத்துடன் வினவுகின்றோம். வீட்டுக்குப் பின்னால் அழைத்துச் செல்கின்றார். வீட்டின் பின் விறாந்தை அவரின் சிற்பக்கூடமாக காட்சிதருகின்றது. இரண்டு அடியில் ஒரு பெண் தெய்வத்தின் திருவுருவச்சிலை உருவாகிக் கொண்டு இருக்கிறது. அருகில் அப்போது தான் குழைத்த சீமெந்துக் கொழுப்புக்கலவை, செய்து கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு எம்முடன் உரையாடிக்கொண்டிருக்கிறார் என்று புரிந்தது. அங்காங்கே செய்து முடிக்கப்படாத கோவில் கோபுரச் சிற்பங்கள்.

இவரின் தந்தை திரு.தர்மலிங்கம் அவர்கள் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர். கூடவே சோதிடம், சித்த ஆயுள் வேத வைத்தியத்துறையில் ஈடுபட்டவர். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவருக்கு எவ்வாறு சிற்பக் கலையில் ஆர்வம் ஏற்பட்டது. அவரே கூறுகிறார்.

நெல்வேலிக்குளம் எனும் கிராமத்தில் சாதாரன விவசாயக்குடும்பத்தில் பிறந்த நான் எனது ஆரம்பக்கல்வியினை கொந்தக்காரன் குளம் அ.த.க. பாடசாலையிலும் ஓமந்தை மத்திய கல்லூரி மற்றும் மல்லாவி மத்திய கல்லூரியிலும் கற்றிருந்தேன். அந்நேர குடும்ப சூழ்நிலை காரணமாக எனது கல்வியினை 11ம் ஆண்டுடன் நிறுத்திக் கொள்ள நேர்ந்தது. ஏதோ ஒரு துறையில் ஆழமாக கால்பதிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தபோதும் எந்தவொரு துறையிலும் மனம் பதியவில்லை. ஏதோ ஒரு கோணத்தில் வாழ்ந்து கொண்டிருந்தேன். சிற்பக் கலைபற்றி சிந்திக்கக்கூட இல்லை. நாட்டின் யுத்த சூழ்நிலை நெருக்கமாக சிறிது காலம் விடுதலைப்புலிகள் அமைப்பிலும் பணியாற்றியிருந்தேன். அதை தொடந்து புனர்வாழ்வு இப்படியாக பலவாறான கஸ்ரங்களின் பின்புதான் என் வாழ்கையின் விடியல் பகுதிக்கு வந்திருந்தேன். நீண்டகால இடைவெளிக்குப்பின் எனது சொந்த ஊருக்கு வந்த நான் ஊருக்கு அருகாமையில் வண்ணாங்குளம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இராஜகோபுர வேலை நடைபெறுவதை கேள்விப்பட்டேன். பார்ப்பதற்கு சென்றபோது தான் எனக்கு இந்த சிற்பக்கலை பற்றிய அறிமுகம் ஏற்பட்டது. முழுப்பேருமே இந்திய சிற்பாச்சாரியர்கள், உதவியாளர்கள், லேபர், மற்றும் மேசன்மார்கள் மட்டும் எமது நாட்வர்கள், எப்படியாவது சிற்பக்கலையினை கற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஆவல் அதிகரிக்க கிருஷ்ணபிள்ளை ஐயா என்பவரூடாக வேலைக்கு பொறுப்பான தலைமை ஆசாரியார் திரு.வினோசிறி அண்ணனுடன் கதைத்து அந்த வேலையில் உதவியாளராக சேர்ந்து கொண்டேன். அங்கு எனக்கு குருவாக கிடைத்தவர் திரு.மாரியப்பன் என்பவர். அவர் தனது அப்பாவுடன் வந்திருந்தார். அவருடன் சுமார் 06



மாதங்களுக்கும் மேலாக பணியாற்றினேன். அவருடைய வீசா முடிவடைய அவர் இந்தியா செல்லவேண்டியிருந்தது. அதனைத் தொடர்ந்து ராஜா அண்ணனுடன் சிறிது காலம் பணியாற்றினேன். இதைவிட கருங்கல்லில் சிலைவடிக்கும் திரு.நாதன் ஆசாரியாரும் எனக்கு நிறைய விடயங்களைக் கற்றுத்தந்தார். 2013 காலப்பகுதியில் தனியாக தொழில் செய்யத் தொடங்கினேன். சிறிய சிறிய ஆலயங்களில் வேலைகள் கிடைத்தன. கிடைத்த வேலைகளை என்னால் முடிந்தளவு திறமையாக செய்தேன். இவ்வாறு கூறும் தனா, கோவில் சிற்பங்களை வடித்துக் கொண்டிருந்த தனக்கு வன்னியூர் கவிராயரின் உருவத்தை வடிக்கும் சந்தர்ப்பத்தை தனது சிற்பக்கலைப்பயணத்தின் முக்கிய திருப்பமாகக் கூறுகிறர். அதன் பின்னர் அமரர். செ.குணபாலசிங்கம் என்பவரின் உருவத்தையும் வடித்துள்ளார். தற்போது சிதம்பரபுரம் ஈழத்துப்பழனி முருகன் ஆலயத்திற்காக ஔவைப் பிராட்டியாருக்கு முருகன் காட்சியளிக்கும் கதையை சிலையாக வடித்துவருகிறார்.

தனது கலைத்துறை வளர்ச்சியின் பின்னணியில் இருந்து உதவிசெய்து வரும் பெரியப்பா சிவராசசுந்தரம், அண்ணா சுதர்சன் ஆகியோரை நன்றியுடன் கூறிக்கொள்ளும் இக்லைஞனை நாமும் வாழ்த்துவோம். ஊக்குவிப்போம்.

தமக்குள்ளே இருக்கின்ற திறமைகளை வெளிக்கொண்டு வராமல், யாருக்குமே பயன்படாமல் வீணடித்துக் கொண்டும் வாழ்வாதாரங்க ளுக்காக போராடிக் கொண்டிருக்கும் இளைய சமுதாயத்தினருக்கு இவ்விளைஞனின் கலைப்பயணம் எடுத்துக்காட்டாக விளங்கும்.




# நாம் நினைத்ததைவிட அதிக நோய்களைப் பரப்பும் ஈக்கள்

**விஞ்ஞானிகள் எச்சரிக்கை**

நாம் நினைத்ததைவிட அதிக நோய்களை ஈக்கள் பரப்புவதாக விஞ்ஞானிகள் ஆய்வில் கண்டறிந்துள்ளனர். வீட்டில் பெரும்பாலும் காணப்படும் ஈக்கள் மற்றும் நீலநிற ஈக்கள், 600 விதமான பாக்டீரியாக்களை பரப்புவதாக மரபணு ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த பக்டீரியக்கள், பெரும்பாலும், வயிற்று வலி, ரத்தத்தில் விஷம் ஏறுதல், நிமோனியா ஆகிய நோய்களை பரப்புகின்றன. ஈக்களால், தனது கால்கள், இறக்கைகள் மற்றும் பாதங்கள் மூலமாக, நோய்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பரப்ப முடியும். அவை சொல்லப்போனால், எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும், அவற்றால் உயிருடன் உள்ள பக்டீரியாக்களைப் பரப்ப முடியும். வீட்டில் பரவலாக காணப்படும் ஈக்களின், உடலின் மேலும், உடலினுள்ளும் இருக் கும் நுண்ணுயிரிக்கள் குறித்து மரபணு ஆய்வுமுறை வழியாக இந்த ஆய்வு நடத்தப்பட்டது. வீட்டில் பொதுவாக பார்க்கக்கூடிய ஈக்கள் 351 வகையான பக்டீரியாக்களை பரப்புகின்றன. சூடான காலங்களில் வரும், நீலநிற ஈக்கள் 316 வகை பக்டீரியாக்களை பரப்புகின்றன. இந்த இருவகை ஈக்களாலும், அதிகப்படியான பக்டீரியாக்கள் பரப்பப்படுகின்றன. பொதுசுகாதார அதிகாரிகளால், நோய்களை திடீரென பரப்பும் காரணிகளாக ஈக்கள் பார்க்கப்பட்டிருக்கலாம் என்று இந்த ஆய்வை வெளியிட்ட ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# கவிதை மழை

## விதவையின்
### மனக் குமுறல்

வரம் இரண்டு பெற்றேன்
இறைவனிடம்
சோகத்தையும் கண்ணீரையும்

கனவுகள் உயிர் பெறும்
காலத்தில்
கனவாகி போனதே மண வாழ்க்கை

சோகம் என்ற சொல்லின்
பிரதிபலிப்பு
கண்களில் ஓரம் கசிகின்ற
கண்ணீர்த் துளிகள்

புன்னகையும் பொன்னகையும்
காய்ந்து போன நதியானது
புன்னகைக்க உதடும் மறுத்தன
பொன்னகைக்கு மனதும் மறுத்தன

மனித மனங்களும் ஊமையாகின
கடவுளும் கல்லாகிப் போனான்
கண்ணீர் துளிகளை
காணிக்கையாக்கிவிட்டு

விடைதெரியா விடுகதையான
வாழ்வு
கால நதியில் நீந்துகின்றது
கரை சேர.....!!

புரிகன்யா லக்சிதரன்



## நேசிப்பு

ஆற்றையும் காற்றையும் - நீ
நேசிக்காவிட்டால்
கூற்றுத்தான் உனக்கு
நேசனாவான்

மண்ணையும் மரத்தையும் - நீ
நேசிக்காவிட்டால்
சுவாசந்தான் உனக்கு
நீசனாவான்

அலையையும் கடலையும் - நீ
நேசிக்காவிட்டால்
ஆழிப்பேரலை தான் உன்னை
அழிப்போனாவான்

மலையையும் முகிலையும் - நீ
நேசிக்காவிடில்
நாட்டிலும் கூட உனக்கு
நட்டமளிப்பார்

சூரியனையும் சந்திரனையும் - நீ
நேசிக்காவிடில்
பகல் இரா இரண்டிலும்
ஒளியிழப்பாய்

இயற்கையையும் அன்னையையும் - நீ
பேணாவிடில்
மகிழ்வான வாழ்வின்றி
இறந்தொழிவாய்.

மி.சூசைதாசன்

## கைதாகும் எலும்புக்கூடுகள்

வேலையில்லா
வீணர்கள்
தோண்டுகிறார்கள்
எம்மவர்களின் எச்சங்களை

நாளுக்கு நாள்
இரண்டு மூன்று
நான்கென்று
மண்டை ஓடுகளும்
எலும்புக்கூடுகளும்
இருபத்தைந்து நாளில்
அறுபத்தைந்தைத்
தாண்டி விட்டதாம்

உயிரோடு
இருக்கும் போது
பாதுகாக்காதவர்கள்
எச்சங்களாய்
மிச்சமிருப்பதை
பகுப்பாய்வு செய்து
பாதுகாப்பாக
பெட்டிகளில்
அடுக்குகிறார்களாம்.

தோண்டி எடுப்பதை
விட்டு விட்டு
தோண்டி எடுத்த
எச்சங்கள்
யாருடைய சதியால்
வீழ்ந்ததென்று
பின்புலத்தை தோண்டுங்கள்
ஏதாவது வெளிவருகிறதா
எனப்பார்ப்போம்.

**மன்னார் பெனில்**

## என்னவள்

கண்ணதாசன் எழுதிய
கவி வரியே - உன்
பெயர்

இளைய ராஜா இசைத்த
அற்புத இசைத் தட்டே
உன்வார்த்தை


முகவரியால் உள்ள
உந்தன் பெயரோ
அற்புத சிந்தனை

கண்டம் தாவும்
ஏவுகணையே - உந்தன்
கருவிழிப் பார்வை

கானமயிலின் நடனமே
உந்தன் நடை
ஆக மொத்தத்தில்
கர்ப்பகத்தில் இருக்கும்
அம்மனின் சிலை
நீ......



**கம்பிகளின் மொழி பிறேம்**



# வனப்புறு இயற்கை

முல்லை வளவன்

மெள்ளென மலர்ந்த
மல்லிகை இதழ்களில்
கள்ளினை அருந்தும்
வண்டினைப்பார் - அவை
உற்ற களிப்பின் உவகையில் அங்கு
துள்ளிப் பறந்திடும்
அழகினைப் பார் - துயில்
கொள்ள மறந்த
புள்ளினம் மேவி
தொடர்ந்திடும் இசையின்
இனிமையைப் பார்

அல்லும் பகலும்
அலைந்திடும் பசுக்களின்
அருகினில் வந்திடும்
கன்றினைப்பார் - அதன்
அன்புச் சொரிவினில்
அதன் நிலையடினில்
பொங்கிப்பெருக்கும்
அமுதினைப்பார் - அந்த

அமுதைப் புசித்து
அன்பில் திளைத்திடும்
ஆவின் கன்றினைப்பார்

காரிருள் கண்டு
தோகை விரித்திங்கு
களிமயில் ஆடும்
அழகினைப்பார் - நல்ல
கவினைப் பாடி
களிப்புறு புலவனின்
கண்கள் பனித்திடும்
கவிதையைப்பார் - வெள்ளை

மேகம் உலாவிய
வெண்மதி அழகிலே எழும்
விரக தாமுறு கன்னியைப்பார்

எல்லையிலா களியுவகை
கொண்டோடும் - இள
மான்கள் துள்ளிடும்
அழகினைப்பார்.

தமிழ் தெள்ளி இசைகொண்டு
தீந் தமிழ் பாடிடும்
தேவார முதலிகள்
பக்தியைப்பார் - அவர்
அல்லும் பகலும்
அயராது போராடி
ஆக்கிய கோயில்கள்
அழகினைப்பார்.

முல்லையும் ஆம்பலும்
முகிழ்ந்திடும் இதழ்களில்
முத்தமிட துடிக்கும்
காளையைப்பார் - அவர்
மூச்சினால் துவண்டு
முகர்ச்சியில் கொஞ்சிடும்
கன்னியர் பார் - அவர்
சொல்ல மறந்த கதைகளை
நெஞ்சினில் சுவை கொள்ளும்
கோதையர் அழகினைப்பார்.

சங்கத்தமிழ் கண்டு
சான்றோர் வளர்த்த
பொங்குதமிழ் இன்று
போனதெங்கே - எமை

வங்கக்கடல் தாண்டி
வாழவழிசொன்ன
சிங்கக்கொடி கண்ட
சிரசெங்கே
மங்கும் ஒருநாளில்
மலரும் ஒரு நாள் என்று
சங்கே முழுங்கு தமிழ்
வங்கக்கடல் தாண்டி
வாழும் ஒருநாள் என்று
வாழ்த்தி உரை செய்து
வாழவோம் தமிழ் என்றே

# நாம் தொலைத்த வாழ்வு

நேற்றுவரை நிலவொளியில்
நின்றமுத பால்சுவைத்தோம்
காற்றுவந்து கார்முகிலின்
தண்மையினை தடவிச்செல்லும்
ஊற்று நீரும் இளநீரும்
உவகையுடன் தாகம் தீர்க்கும்
ஊடலையும் காதலையும்
பார்வைகளால் வீசிக்கொண்டோம்
காலணிகள் இன்றி கால் நடையாய்
காததூரம் பயணித்தோம்
விருந்தென்று அழைத்திட்டால்
அரிசி பருப்போடு
கிடைத்த பொருளெல்லாம்
விருப்போடு சுமந்து வந்து
பாசம் நிறைந்த பரிசாய்
கொடுத்துவிட்டு
ஒருவாய் விருந்துணவை
ஊரோடு மகிழ்ந்துண்ட
எழில்மிகு பண்பாடு
இதயத்தை நிறைவாக்கும்
கிட்டியும் கிளித்தட்டும்
ஆடுபுலி ஆட்டமும்
கூட்டாஞ்சோறுமாய்
கிட்டிய காலமது
அயலவர் அறிந்தவர்
யாவரும் உறவுகள்
யார்வீட்டு பிள்ளையையும்
'நம்ம பிள்ளை'
எனச்சுட்டும் உயர்பிணைப்பு....
விரிந்த வானின் கீழ்
அகன்ற உலகம்..
பரந்த நெஞ்சங்கள்
உயர்ந்த உள்ளங்கள்
தொழிநுட்பம் நாகரீகம்
காலூன்றி நின்றபின்
தொலைத்தோம் யாவும்
உலகம் சுருங்கிற்று...
இதயங்களும் கூட..

பூங்கோதை



# ஈழத் தமிழ் எழுத்தாளரான அகளங்கன் ஐயாவுக்கு
## தமிழகத்தில் உயர் விருது

இந்தியா உட்பட 52 நாடுகளைச் சேர்ந்த 70,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இந்தியாவின் SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராயத்தின் 2017ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் நிகழ்வு 01.02.2018 அன்று காட்டாங் குளத்தூரின் பல்கலைக்கழக கலைக் கூடத்தில் நடைபெற்றுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த மூத்த படைப்பாளியும் 48 நூல்களை வெளியிட்டவருமாகிய தமிழ் அறிஞர் அகளங்கன் அவர்களுக்கு அவரது "முற்றத்துக் கரடி" எனும் சிறுகதைத் தொகுப்பின் அடிப்படையில் விபுலாநந்த படைப்பிலக்கிய விருது கிடைத்துள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளாக தமிழியல் சார்ந்த துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு இப் பல்கலைக்கழக தமிழ்ப் பேராயம் விருது வழங்கிக் கௌரவித்து வருகிறது. அந்த வகையில் 2017ஆம் ஆண்டுக்கான விபுலாநந்த படைப்பிலக்கிய விருது ஈழத்தமிழருக்கு கிடைத்துள்ளது.

பல்கலைக்கழக வேந்தர் தா.இரா.பாரிவேந்தர் மற்றும் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் க.பாண்டியராயன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில் உலகளாவிய ரீதியில் 12 தமிழியல் துறை சார்ந்த தகைமை யாளர்களுக்கு விருதும் பணப்பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவருக்கு விருதும் 150,000 ரூபா இந்தியப் பணமும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

எம் மண்ணுக்கு பெருமை பெற்று தந்த அறிஞர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களை வானுயர வாழ்த்துவதில் "அமுதநதி" சஞ்சிகை பெருமை கொள்கிறது.

# மூளைக்கு வேலை 2

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 | 6 | 7 |
| 8 | | | ■ | 9 | | | |
| | ■ | 10 | 11 | ■ | 12 | | ■ |
| 13 | 14 | | | ■ | 15 | | 16 |
| | | ■ | | ■ | ■ | | |
| ■ | 17 | 18 | ■ | 19 | | ■ | |
| 20 | | | ■ | | ■ | 21 | |
| 22 | | | ■ | 23 | | | |

### இடமிருந்து வலம்

1. உன்னத உறவு
2. இதனால் அழிந்தோர் பலர்
8. செவிக்கு இனிமை (குழம்பி)
9. புலரும் பொழுது (குழம்பி)
10. வருத்து
12. கோள் ஒன்று கடைசி எழுத்தை இழந்து
13. பகுதி, பிரிவு
15. கூரையைத் தாங்கி நிற்பது
17. தோழன்
19. கறுப்பு (திரும்பியுள்ளது)
20. இன்மை, உலகம்
21. ஐம்பொறிகளில் ஒன்று திரும்பி
22. சிலரின் வார்த்தை இதுபோன்று கூர்மையானது
23. அருவம் இல்லாதது.

### மேலிருந்து கீழ்

1. பொது இடம்
2. தன்மைப் பன்மை (தலைகீழ்)
3. மாந்தராய்ப் பிறக்க இது செய்தல் வேண்டும்.
4. ஏவல் வினைச் சொல்
5. பிரியம் (குழம்பி)
6. முன்னேற்றத்தின் தடை (குழம்பி)
7. இது இதைக் கெடுக்கும்
11. பெண்ணையும் குறிக்கும். இதுவும் ஒரு கைத்தொழில்
14. இது சூதுவாதோடு சேர்ந்தது
16. நூல் புதிய இல்லம் என்றும் கூறலாம்
18. பூவைத்தாங்கி நிற்பது
19. இது போனால் சடம் (தலைகீழ்)

விடைகளை ஒரு வெள்ளைத் தாளில் எழுதி, எமது வழமையான முகவரிக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250/-, 150/-, 100/- வழங்கப்படும்

# நாமும் வேலைத்தளமும்

"கஞ்சி குடிப்பதற்கிலார்–அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்"

பாரதியின் இந்த வார்த்தைகள் என்னைச் சிந்திக்கத் தூண்டின.

நம்மில் பலர் துன்பங்களை எதிர்நோக்குகின்ற எந்த வேளையிலும் அதற்கான காரணங்களை சிந்திக்காதவர்களாக மீண்டும் மீண்டும் அதே பிரச்சனைக்குள் வீழ்ந்திருக்கிறோம். இங்கே எழுதப்படுபவை உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்தவை தான். எனவே ஏற்கெனவே தெரிந்திருந்தும் அதை எடுத்து மீட்டிப் பார்க்காமல் இருப்பவர்களுக்கும், எனக்கும் கூட உபயோகப்படுமே என்ற ஆர்வத்தில் அதை எடுத்து தூசு தட்டும் முயற்சியே இந்த ஆக்கம்...

பல வேளைகளில் நாம் நமது அன்றாட வாழ்வில் சில விடயங்களை பகுத்தறியாததினால் சிக்கல்களை எதிர் நோக்குகின்றோம். அவற்றில் ஒன்றாக எனது சிந்தனையைத் தொட்ட விடயத்தை எழுதி விட வேண்டுமென்ற ஆவல்.. எழுதி விடுகிறேன்..

க. வேணி

நாம் தொழிலாளிகளாக இருக்கும் வரை மேலதிகாரிகளை புரிந்து கொள்ள மறுக்கிறோம். மேலதிகாரிகள் ஆகும் போது தொழிலாளிகளைப் புரிந்து கொள்ள மறுக்கிறோம். மாணவர்களாக இருக்கும் போது ஆசிரியர்களைப் புரிந்து கொள்ள மறுக்கிறோம் - ஆசிரியர்களாகும் போது மாணவர்களைப் புரிந்து கொள்ள மறுக்கிறோம். மருமகளாக இருக்கும் போது மாமியாரைப் புரிந்து கொள்ள மறுக்கிறோம் - மாமியாராகும் போது மருமகளைப் புரிந்து கொள்ள



மறுக்கிறோம்.. இப்படி ஒவ்வொரு இடத்திலும் நாம் வகிக்கும் பாத்திரத்தில் அல்லது பதவியில் எதிர்த்தரப்பினரைப் புரிந்து கொள்ளாமையினால் நமது நிம்மதிக்கு நாங்களே குழி தோண்டி விடுகிறோம்.

பல வேளைகளில் நமக்கு கிடைக்கும் நெகிழ்வுத் தன்மையான விடயங்களை அல்லது சலுகைகளை நாம் துஸ்பிரயோகம் செய்து விடுகிறோம். அதுவே நமது முதலாவது தவறாகிறது. உதாரணத்திற்கு ஒரு வேலைத்தளத்தில் ஒரே ஒரு விடயத்தை மட்டும் எடுத்து அலசிப் பார்ப்போம்... (இந்த உதாரணத்தில் இது போன்ற எமது வேறு செயற்பாடுகளையும் பொருத்திப் பார்க்கலாம்).

வேலைக்கு சமூகமளிக்கும் நேரம்... ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கும். அதே வேளை சில மேலதிகாரிகள் இவற்றில் நெகிழ்வுத் தன்மையை ஏற்றுக் கொள்பவர்களாக இருப்பர். போக்குவரத்து நெரிசல் அல்லது தவிர்க்க முடியாத ஏதாவது தடங்கல் ஏற்படும் போது சற்று தாமதமாக வேலைக்கு போனால், வேலை நேரம் முடிந்த பின்னர் இன்னும் கொஞ்ச நேரம் வேலை செய்து விட்டால் போதும் என்ற நிலை வேலைத்தளத்தில் இருந்தால் அது சலுகை.

ஆனால் நம்மில் பலர் அதையே நாளாந்தம் பழக்கப்படுத்தி விடுவோம். தாமதமாகிப் போனால் பரவாயில்லை என்ற மன நிலை ஏற்பட்டு விட்டால் நாளடைவில் நம்மை அறியாமலே தொடர்ச்சியாக வேலைக்கு செல்லத் தயாராகும் போதே ஒவ்வொரு காரணிகளாக ஆரம்பிக்கும். அடிக்கடி தாமதமாக செல்ல ஆரம்பித்து விடுவோம். இப்போது மேலதிகாரியின் நிலை எப்படி இருக்கும்...??

ஆரம்பத்தில் அதை விட்டுக் கொடுக்கும் மேலதிகாரி, பின்னர் சங்கடத்துக்குள்ளாகத் தொடங்குவார். நீங்கள் மேலதிகாரிக்குப் பிடித்த நபராக இருந்தால் அவருடைய நிலை இன்னும் மோசமாகும். உங்களைக் கண்டிக்காத வரை ஏனைய பணியாளர்களையும் கட்டுப்படுத்த முடியாதவராவார். இந்த நிலையில் தான் நீங்கள் பிரச்சனையை எதிர்நோக்க ஆரம்பிப்பீர்கள்..

அமுதநதி சஞ்சிகையில்
மிகக் குறைந்த செலவில்
விளம்பரங்கள்
செய்து கொள்ளலாம்

தொடர்புகளுக்கு..

077 264 02 02



## வண்ண வண்ண பூ

வண்ண வண்ண பூவாம்
வடிவான பூவாம்
வெள்ளை இதழும் கொண்டது
அகண்ட இலையும் இருக்குது
நீரின் மேலே மிதக்குமாம்
பூவின் பெயர் என்னவாம்

தம்பி இங்கே ஓடிவா
அழகான மீன்களார்
சுழன்று ஓடி திரியிறார்
வெள்ளை செட்டை நாரையார்
மீனைப் பிடிக்க வந்திட்டார்
ஒற்றைக் காலில் நிற்கிறார்

தெளிந்த நீரில் முதலையார்
கண்ணை சிமிட்டி பார்க்கிறார்
நீண்ட வால் தும்பியார் பறந்து
சுற்றி திரியிறார்
வட்டமான பொட்டுக்களை
செட்டையிலே ஒட்டிக்கொண்டு
தேன்குடிக்கும் ஆசையில்
சீமாட்டியார் வருகிறார்
அவரின் பெயர் என்னவாம்

பு.பிரியதர்ஷன்

## வார்த்தை

கண்ணாடி,
உடைந்த பின்
ஒட்டுவது சிரமம்
அதன் சிதைவுகள்
வெளிப்படையாக தெரியும்

வார்த்தைகளை
கொட்டிய பின்
அள்ளுவது கடினம்
அதன் வேதனை
வெளிப்படையாக தெரியாது

யோ.ஹர்சாந்தனி மேரி

# உலக நீர் தினம்




ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்கு இணங்க 1993ஆம் ஆண்டு முதல் மார்ச் 22ஆம் தேதி உலக தண்ணீர் தினம் என கொண்டாடப்படுகிறது.

நீர்வளத்தைக் காப்பதும், அதனை பெருக்குவது குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் இந்நாளின் நோக்கமாகும்.

நீரின்றி அமையாது உலகு என்பது வள்ளுவர் வாக்கு. இந்த உலகை, உலக உயிர்களை வாழவைக்கும் அமிர்தம் போன்றது நீர்.

கடந்த 1992ஆம் ஆண்டு ஐ.நா. சுற்றுச்சூழல் வளர்ச்சி கழக கூட்டத்தில் நீர்வள பாதுகாப்பை வலுப்படுத்த வேண் டும் என்று அறிவித்தது. அதன் பேரில் ஆண்டுதோறும் மார்ச் 22ஆம் தேதி உலக தண்ணீர் தினம் கொண்டாடப்படுகிறது.

உலக நாடுகளில் 40 சதவீத மக்கள் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். பல கோடி மக்கள் நீர் பற்றாக் குறை உள்ள பகுதியில் வசிக்கிறார்கள். குடிநீர் மாசுபடுவதாலும், வரட்சியாலும்

(55ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர் முக்கம்



7 வித்தியாசங்கள் கண்டுபிடியுங்கள்





**—மகாகவி பாரதியார்**

தேடிச் சோறு நிதந்தின்று
பல சின்னஞ் சிறுகதைகள் பேசி
மனம் வாடித் துன்பமிக உழன்று
பிறர் வாடப் பல செயல்கள் செய்து
நரை கூடிக் கிழப்பருவம் எய்தி
கொடுங் கூற்றுக் கிரையெனப்பின் மாயும்
பல வேடிக்கை மனிதரைப் போலே
நான் வீழ்வே னென்று நினைத்தாயோ?

## மாணவர் ஒழுக்கம்

ஒழுக்கம் மாணவர்களை வலிமை உள்ளவர்களாக, எதிர் காலத்தில் சிறந்தவர்களாக மாற்றுகிறது.

நல்ல நடத்தை, ஒரு மாணவரை நோக்கி மற்றவர்கள் திரும்பி பார்க்க வைக்கிறது. பாடசாலைகளில் ஒழுக்கத்தை உருவாக்குவதில் ஆசிரியர் முக்கிய பங்கு வகிக்கிறார். தான் ஒரு முன் மாதிரியாகத் திகழ வேண்டும். ஆசிரியர் நடவடிக்கைகள் மாணவர்கள் அவர் மீது நம்பிக்கை கொள்ளும் படி இருத்தல் வேண்டும். ஆசிரியரின் செயற்பாடுகள் மாண வர்கள் நம்பிக்கை கொள்ளும்படி இருக்க வேண்டும். அறிவு சார், உளம் சார் மற்றும் உடல் சார் செயற்பாடுகள் மாணவர்களின் ஒழுக்கம் மேம்பட உதவ வேண்டும்.

சரியான நேரத்தில் பாடசாலைக்கு வருதல், செயற்பாடுகளை சரியான நேரத்தில் முடித்தல், ஆசிரியர்க ளுக்கும் பெரியவர்களுக்கும் மரியாதை செய்தல் முதலியவை மாணவர்களின் ஒழுக்கச்செயற் பாட்டை அதிகரிக்கும். பாடசாலை களில் ஒழுக்கத்தை மணவர்கள் கற்றுக் கொள்வதால், குடும்பம் மற்றும் சமுதாயத்தில் மாணவர் செயற்பாடுகள் போற்றத் தகுந்த வகையில் மேம்படும்.



# காதலர் தினம் எப்படி வந்தது

பெப்ரவரி மாதம் பிறந்ததுமே சட்டென்று நினைவுக்கு வருவது காதலர் தினம்தான். காதலிக்கு பரிசு வாங்கவும், காதலை வெளிப்படுத்தவும் இதை ஒரு சந்தர்ப்பமாக இளைஞர்கள் பலர் பயன்படுத்திக் கொள்கின்றனர். லூப்பர்காலியா என்ற திருவிழாவை ரோமானியர்கள் கொண்டாடி வந்தனர். பிப்ரவரி 14ம் தேதி மத்திய இங்கிலாந்தில் பறவைகள் மூலம் ஜோடிகளைத் தேர்வு செய்த ஆங்கிலேய பழமைவாதிகளின் இந்த நாளையே காதலர் தினமாக கொண்டாடுவதாக சிலர் கூறுகின்றனர். இருப்பினும், ரோமானிய அரசனின் ஆட்சிக் காலத்தில்தான் காதலர் தின கொண்டாட்டம் துவங்கியதற்கான சான்றுகள் உள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கிளாடிஸ் மிடி ஆட்சி புரிந்தபோது, தனது படைவீரர்களுக்கு முட்டாள் தனமாக உத்தரவு பிறப்பிப்பானாம். இந்த அரசனின் நடவடிக்கையால் படையில் சேர பலர் தயங்கினர். திடீரென ஒருநாள் அவன் அமைச்சர்களை அழைத்தான். 'ரோமாபுரி நாட்டில் இனி எவருமே திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று உடனே ஒரு அறிவிப்பு செய்யுங்கள். ஏற்கனவே நிச்சயித்த திருமணங்களும் இரத்து செய்யப்படுகிறது. இதை மீறுபவர்கள் கைது செய்யப்பட்டு இருட்டுச் சிறையில் அடைக்கப்படுவார்கள். பின்னர் பொது இடத்தில் அவர்கள் கல்லால் அடித்து தலை துண்டித்து கொல்லப்படுவார்கள்" என்றானாம்.

இதை கேட்ட ரோமானியர்கள் அதிர்ச்சிக்கு ஆளாகினர். திருமணமானவர்கள் மனைவியை பிரிந்து வரத் தயங்குகிறார்கள். காதலிக்கும் வாலிபர்கள் காதலியை பிரிந்து வர தயங்குகின்றனர். இது இரண்டும் இல்லாவிட்டால் படையில் சேர்வார்கள் என்று அவன் நினைத்துள்ளான். பாதிரியார் வாலண்டைன் அரசனின் இந்த அறிவிப்பை மீறி இரகசியமாகத்

திருமணங்களை நடத்தி வைத்தார். இதையறிந்த மன்னன் வாலண்டைனை கைது செய்து சிறையில் அடைத்தான். மரண தண்டனையை நிறைவேற்ற நாளும் நிர்ணயிக்கப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் சிறையில் இருந்த பாதிரியார் வாலண்டை னுக்கும் சிறைக் காவலர் தலைவனின் பார்வை இழந்த மகள் அஸ்டோரியசுக்கும் காதல் மலர்ந் துள்ளது. வாலண்டைனை விடுவிக்க அஸ்டோரியஸ் முயன்றாள். இதை அறிந்த சிறைத் துறைத் தலைவன் மகளை வீட்டுச் சிறையில் வைத்தான். அனைத்து காவலையும் மீறி காகித அட்டை ஒன்றின் மூலம் செய்தி அனுப்பினார் வாலண்டைன். இந்த வரலாறு உண்மையாக இருக்குமா னால், முதல் காதலர் வாழ்த்து இதுவாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

இந்த கடிதத்தை படிக்கும் அதே நேரத்தில் கல்லால் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்த பின் வாலண்டைனின் தலை துண்டிக் கப்பட்டது. அந்த நாள் 270வது வருடம் பிப்ரவரி மாதம் 14ம் தேதி. வாலண் டைன் ரோம் மக்களின் மனங்களில் மறையாமல் நிறைந்திருந்தார். ரோமா னிய தேவாலயங்கள் ஐரோப்பியரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த போது 'பாகான்' விடுமுறை தினம் அறிவிக்கப்பட்டது. இதுவே வாலண்டைன் தினமாகக் கொண்டாடப்பட்டது. சுமார் 200 ஆண்டுகளுக்கு பிறகு போப்பாண்டவர் ஜெலாசியஸ் மி வாலண்டைனை புனிதராக அறிவித்தார். அன்றிலிருந்து வாலண்டைன் தினம் காதலர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

## பூமியும் காதலும் ஒன்று

தோற்றத்தால் பூமியும் காதலும்
ஒன்று
காற்றிலே மிதப்பதனாலும்
பூமியும் காதலும் ஒன்று

ஈர்ப்பதால் பூமியும் காதலும்
ஒன்று
இன்ப துன்பம் இரண்டையும்
தாங்குவதாலும்
பூமியும் காதலும் ஒன்று

தூங்காததால் பூமியும் காதலும்
ஒன்று
தூங்கினாலும் கனவிலும்
சுற்றுவதால்
பூமியும் காதலும் ஒன்று

மலரை புனிதமாக்கி ரசிப்பதனால்
பூமியும் காதலும் ஒன்று
நிலவை அழகுபடுத்தி
ரசிப்பதனாலும்
பூமியும் காதலும் ஒன்று

தன்னைத் தானே சுற்ற
வைப்பதால்
பூமியும் காதலும் ஒன்று
தன் நீரை கூட
பற்றவைப்பதனாலும்
பூமியும் காதலும் ஒன்று

மௌனிப்பதால் பூமியும் காதலும்
ஒன்று
மரணிக்காதவரை பூமியும்
காதலும் ஒன்று

புனிதமாய்க் காதல் செய்ய
காதலர்தின வாழ்த்துக்கள்

-வன்னியூர் குரூஸ்

# வெள்ளிக்கிழமை இரவுகள்

அ. முத்துலிங்கம்

ஏதோ காட்டு மிருகம் துரத்தியதுபோல உள்ளே பாய்ந்தாள் ஆகவி. பத்து வயதுதான் இருக்கும். அவளுடன் வந்த காற்றும் உள்ளே நுழைந்தது. புத்தகப் பையை கீழே எறிந்தாள். எதையோ தேடுவதுபோல இரண்டு பக்கமும் பார்த்தாள். பத்து மைல் தூரம் ஓடிவந்ததுபோல அவளுக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

தாயார் சமையல் அறையில் இருந்து மெள்ள எட்டிப் பார்த்தார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இப்படி நடப்பதுதான். பள்ளியிலிருந்து வரும்போதே சண்டை பிடிக்க ஏதாவது காரணத்துடன் வருவாள். அகிலா தனியாக கனடாவுக்கு அகதியாக வந்தபோது நாலு மாதம் கர்ப்பம். ஐந்து மாதம் கழித்து ஆகவி பிறந்தாள். தாயாரின் ஒரே செல்லம். அவர் மடியில் தலைவைத்து படுக்க அகிலா முடியை கோதிவிட்டார். 'கோதாதே. என் தலையை இறுக்கி அழுத்து' என்று கத்தினாள். தாயார் மகளின் தலையை இரண்டு கைகளாலும் அமத்தி பிடித்தார். 'சரி, உன் பொய்களால் என் மண்டையை நிரப்பு' என்றாள் இவ்வளவு ஆவேசமாகவும் கோபமாகவும் ஆகவி பேசியதே இல்லை.

அகிலாவுக்கு மகளை எப்படி சமாளிப்பது என்று தெரியும். 'நீ முதலில் சாப்பிடு. பின்னர் யார் உனக்கு நான் பொய் பேசியதாகச் சொன்னார்கள்? அதைச் சொல்லு." 'ஒல்லிப்பிச்சான் மைக்தான் சொன்னான்.' 'அவனுக்கு எப்படி தெரியும்?' 'அவனுக்கு எல்லாம் தெரியும். அவனுக்கு இரண்டு அப்பாக்கள். இருவருமே விமானங்கள் திருத்துவார்கள்.' "விமானம் திருத்தினால் அவர்களுக்கு எல்லாம் தெரியுமா? வேறு என்ன சொன்னான்.' 'என்னுடைய அப்பா ஓடிவிட்டாராம்..' 'அதற்கு நீ என்ன சொன்னாய்?' 'கழுதைப் பல், சதுரப் பல்' என்று திட்டினேன். 'எதற்கு அப்படித் திட்டினாய்?' 'எனக்கு அதனிலும் மோசமான வசவு தெரியாதே.' ' அவன் என்ன சொன்னான்?' 'உன்னுடைய அம்மா உன்னை வீசிவிட்டு தொப்புள்கொடியை வைத்திருந்திருக்கலாம்' என்றான். 'அப்படியா? நீ என்ன சொன்னாய்?' 'நீயே பார்வைக்கு ஒரு தொப்புள்கொடி போலத்தானே இருக்கிறாய்' என்றேன். அப்போது மணி அடித்துவிட்டது.

வெள்ளிக்கிழமை இரவுகளை ஆகவியால் தாங்கமுடியாது அகிலாவும் வெறுத்தாள். அவள் வேலை செய்யும் கம்பனியில் வாரத்தில் நான்கு நாட்கள் பகல் வேலை. வெள்ளிக்கிழமை மாத்திரம் இரவு வேலை. இரவிரவாக ஏற்றுமதிக்கு வேண்டிய

பொருட்களை பெட்டிகளில் அடைத்து தயாராக்கவேண்டும். சனிக்கிழமை காலை அவற்றை ஏற்றிப்போக கனரக வண்டிகள் வந்துவிடும். வெள்ளிக்கிழமை இரவுகளில் ஆகவிக்கு உணவு கொடுத்து அவளை படுக்கவைத்துவிட்டு வேலைக்கு புறப்படுவாள். படுக்கையில் இருந்து டிவி பார்த்தவாறு ஆகவி தூங்கிவிடுவாள். அடுத்தநாள் காலை அவள் எழும்பும்போது அம்மா பக்கத்தில் இருப்பார்.

ஆகவியின் பள்ளிக்கூடத்தில் ஐந்து விதமான குடும்ப பிள்ளைகள் படித்தார்கள். இரண்டு அம்மா உள்ள பிள்ளைகள். இரண்டு அப்பா உள்ள பிள்ளைகள். அப்பா, அம்மா இருவருமே உள்ள பிள்ளைகள். தனி அப்பா பிள்ளை் தனி அம்மா பிள்ளை. இரண்டு அப்பா அல்லது இரண்டு அம்மா அல்லது அம்மா, அப்பா உள்ள பிள்ளைகள் பெருமை அடித்துக் கொள்வார்கள். தனி அம்மா பிள்ளைகளை அவர்கள் கேலி செய்வார்கள். 'உன் அப்பா எங்கே? ஓடிவிட்டாரா?' என்று இவளை சீண்டுவதே அவர்கள் வேலை. .

'எங்கே என் அப்பா?' என்று ஆகவி பலதடவைகள் தாயாரிடம் சீறியிருக்கிறாள். சிலகாலமாகவே அவள். தாயாரை மதிப்பது கிடையாது. என்ன சொன்னாலும் அதற்கு ஒரு பதில் இருக்கும். அந்த வருடத்தில் மட்டும் அவள் பள்ளிக்கூடத்தில் 100 பென்சில்களைத் தொலைத்திருந்தாள். கேட்டால் 'தொலைந்துவிட்டது' என்று கத்துகிறாள். அவளுடன் படிக்கும் மற்றப் பிள்ளைகளும் இப்படித்தான் தொலைக்கிறார்களா? யாராவது பெரியவர்கள் 'நீ எப்படியம்மா இருக்கிறாய்?' என்று கேட்டால் இவள் 'நல்லாயிருக்கிறேன்' என்று பதில் சொல்வதில்லை. 'முழுதாயிருக்கிறேன்' என்கிறாள். 'சாப்பிட்டாயா?' என்று விசாரித்தால் ஆம் இல்லை என்று பதில் சொன்னால் போதும். ஆனால் இவள் பல்லை இளித்துக் காட்டிக்கொண்டு ஒன்றுமே பேசாமல் நிற்பாள்.

'எங்கே உன் பென்சில்?' என்றார் அகிலா.

'தொலைந்துவிட்டது.'

'எங்கே தொலைந்தது?'

'பென்சில் என்னிடம் சொல்லிவிட்டா போகும்? எப்படியோ தொலைந்துவிட்டது.'

'அது எப்படி ஒவ்வொரு நாளும் தொலைந்து போகும். உனக்கு பென்சில் வாங்கிக் கொடுத்தே நான் ஏழையாகி விடுவேன்போல இருக்கிறதே?'

'இப்ப நாங்கள் பணக்காரர்களா?'



'இடக்காகப் பேசாதே. நான் ஒருத்தி உனக்காக இரவு பகலாக உழைக்கிறேன். சமைத்து போடுகிறேன். உன் உடுப்பை தோய்க்கிறேன். கொஞ்சம் பொறுப்பாக இரு மகள். புரிகிறதா?'

'நீ சொன்னதில் எந்த வார்த்தையை நான் அகராதியை பார்த்து புரிந்து கொள்ள வேண்டும்?'.

இடியப்பத்துக்கு குழைத்த மாவில் சின்ன உருண்டை செய்து அதைக் கையிலே உருட்டிக்கொண்டே ஆகவி மேசைக்கு அடியில் உட்கார்ந்து கதைப்புத்தகம் படித்தாள். அந்த ஓர் இடத்தில்தான் அவளுக்கு தாயாரின் தொந்தரவு இல்லை. நீண்டநேரமாக தயாரித்த புதுவிதமான சிற்றுண்டியை மேசைக்கு கீழே குனிந்து மகளுக்கு நீட்டினாள் அகிலா. அதன் நிறத்தையும் வடிவத்தையும் பார்த்துவிட்டு ஆகவி வேண்டாம் என்றாள் 'சாப்பிட்டுப் பார். நல்லாயிருக்கும்'. 'நீ செய்வது ஒன்றுமே நல்லாயிராது.' 'இப்ப நீ ஆக மோசம். குழந்தையாய் இருந்தபோது பிரச்சினையே இல்லை.' 'என்ன சாப்பிட்டேன்?' 'என்னைத்தான்.' ஆகவி அதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தாள். மேசைக்கு வெளியே வந்து தாயை சுற்றி சுற்றி ஓடினாள். 'நான் விட்ட மிச்ச உணவு, அம்மா. நான் விட்ட மிச்ச உணவு, அம்மா' அகிலாவுக்கும் சிரிப்பு வந்தது. ஆகவியுடன் தர்க்கம் செய்யவே முடியாது. அவள் யோசிப்பதே இல்லை. வாயை திறந்ததும் உள்ளேயிருந்து சொற்கள் வெளியே வந்து விழும்.

இத்தனை புத்திசாலியான பெண் தினமும் பென்சில்களை எப்படி தொலைக்கிறாள்? அகிலாவுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. அவளுடைய பள்ளிக்கூட ஆசிரியர் அவள் வேண்டுமென்றே தொலைக்கிறாள் என்றார். அவளுடன் படிக்கும் சக மாணவிகளுக்கு கூட அந்த மர்மம் புரியவில்லை. மகளை மனநல மருத்துவரிடம் அழைத்துப் போனாள் அகிலா. மருத்துவர் இருவரிடமும் கேள்விகள் கேட்டார். பின்னர் சிறுமியிடம் தனியாகப் பேசினார். 'ஆகவியின் உள்ளத்திலே அடி ஆழத்தில் ஏதோ இழப்பு இருக்கிறது. அதை சரிக்கட்ட முயலுங்கள்' என்றார். அப்போதுதான் அவளுக்கு அப்பா இல்லாத குறையாக இருக்கலாமோ என்ற சந்தேகம் அகிலாவுக்கு ஏற்பட்டது..

சில்வியாவைத் தொலைபேசியில் அழைத்தாள். அகிலாவுடன் படித்த சிநேகிதி அவள். பத்திரிகைத்துறையில் புலனாய்வுக் கட்டுரைகள் எழுதி கொழும்பில் பிரபலமாக இருந்தாள். அகிலாவின் அம்மா மாங்குளத்தில் இறந்தபோது போர்ச்சூழல் காரணமாக அகிலாவால் போக முடியவில்லை. சில்வியாதான் அகிலாவுக்காக இறுதிக் காரியங்களை செய்தாள். அவளுக்கு நடந்த சம்பவம் முழுக்க தெரியும். இரவிரவாக தப்பி வந்த அகிலா கொழும்பிலே அவளுடன் தங்குவதற்கும், பின்னர் கள்ள கடவுச்சீட்டில் கனடா போவதற்கும் உதவிசெய்தது சில்வியாதான். அவளிடம் விசயத்தை சொன்னபோது, 'பெயர் தெரியுமா?' என்றாள் அகிலா சொன்னாள். 'எப்படித் தெரியும்?" 'அவர்கள் பேசிக்கொண்டார்கள்.' 'வேறு ஏதாவது தகவல் உண்டா?" ' கொமாண்டோ படைப்பிரிவு மேஜர் ஜெயநாத்தின் தலைமையில்தான் தாக்குதல் தொடங்கியது.' 'இது போதும், கவலையை விடு.' என்றார் சில்வியா

இரண்டு மாதம் கழித்து நடு இரவில் சில்வியாவிடமிருந்து தொலைபேசி வந்தது. 'உடனே புறப்படு. கண்டுபிடித்துவிட்டேன்' என்றார். முகவரியை அவர் சொல்லச்சொல்ல அகிலா தினப்பத்திரிகையின் மூலையில் எழுதிக்கொண்டாள். இரண்டே நாளில் புறப்படுவதாக அகிலா சொன்னாள். 'விரைவுதான் முக்கியம். பல மாதங்களாகச் செய்த ஆராய்ச்சி கடைசியில் பலன் தந்திருக்கிறது. இதை தவறவிட்டால் இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்காது. உடனே வா.'

ஜூலை 9, 2010 வெள்ளிக்கிழமை அகிலாவும் மகளும் கொழும்புபோய் இறங்கினார்கள். 'மினுவாங்கொட கொழும்பிலிருந்து 35 கிலோமீட்டர் தூரம். அங்கிருந்து பல கி.மீட்டர்கள் உள்ளே உடுகம்பொல என்ற கிராமத்துக்கு போகவேண்டும். முழுக்க முழுக்க சிங்களவர்கள் வாழும் பிரதேசம் என்றபடியால்

அகிலாவுக்கு சிறிது தயக்கம் இருந்தது. சில்வியா சிரித்தாள். 'ஞாபகம் இருக்கா? நீ கனடாவுக்கு புறப்பட்டபோது இப்படித்தான் பயந்து செத்தாய். நான் சொன்னேன் '2000 வருடங்களுக்கு முன்னர் யேசுவை பெற்றெடுக்க மேரி பத்து நாட்கள் கழுதை மேல் பயணம் செய்யவில்லையா? நீ விமானத்தில்தானே பறக்கிறாய். உனக்கு என்ன பிரச்சினை?' இப்பொழுது பார். போர் முடிந்துவிட்டது. ஒரு மணி நேரப் பயணம்தானே. பயமில்லாமல் போ. எனக்குத் தெரிந்த ஆட்டோ ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறேன்' என்றார் சில்வியா.

ஆகவியால் பரவசத்தை தாளமுடியவில்லை. அவள் ஆட்டோவை கண்டது கிடையாது. தலையையும் பாதி உடம்பையும் வெளியே நீட்டி துடைத்து வைத்தது போன்ற வானத்தை அண்ணாந்து பார்த்தாள். வெளிச்சம் அலைஅலையாக வந்தது. மினுவாங்கொட தாண்டியதும் தார் ரோட்டு முடிந்து ஆட்டோ துள்ளத் தொடங்கியபோது ஆகவியும் சேர்ந்து துள்ளினாள். வீதியிலே கிடந்த பிளாஸ்டிக் பைகள் ஆட்டோவை துரத்தி வந்தன. ரோட்டோரத்தில் முளைத்த வாழைமரங்களில் முழு வாழைக்குலைகள் தொங்கின. ஆகவியால் நம்பவே முடியவில்லை. மாமரத்தில் போத்தல்கள் கயிறுகளில் ஆடின. கழுத்து மெலிந்த போத்தல்களுக்குள் பெரிய மாங்காய்கள் தொங்கின. 'இது எப்படி?' என்றாள் ஆகவி மேலும் வியப்புடன். 'உனக்குத்தான் எல்லாம் தெரியுமே. யோசி' என்றார் தாய். வான்கோழிகளை ஆகவி மேசையில் பார்த்திருந்தாள். ரோட்டோரத்தில் கண்டதில்லை. சின்னத் தலையும் பெரிய உடலுமாக அவை வீதிகளில் அசைந்து அசைந்து உலாவின. அவளுக்கு சிரிப்பு சிரிப்பாக வந்தது. அவள் சின்ன மூளைக்குள் அத்தனை ஆச்சரியங்களை அடக்க முடியவில்லை. திடீரென்று 'எங்கே அம்மா போகிறோம்?. பாட்டியின் சொந்தக்காரர் வீட்டுக்கா?' என்றாள்.

'கொஞ்சம் பொறு. என்ன அவசரம்? சொல்கிறேன். உன்னிடமிருந்து நான் நல்ல நடத்தை எதிர்பார்க்கிறேன். துப்புவதுபோல கதைக்காதே. உன் மூளையை பாவிப்பதை நிறுத்து. உன்னுடைய பெயர் என்ன என்று யாராவது கேட்டால் ஒரு நல்ல அடக்கமான கனடிய சிறுமிபோல ஆகவி என்று சொல்.. பல்லை இளித்துக்கொண்டு நிற்காதே.' 'அது எல்லாம் சரி. நான் நல்ல பிள்ளையாக நடந்தால் எனக்கு என்ன தருவாய்?' 'என்ன தரவேண்டும்? நீ வகுப்பில் முதலாவதாக வந்தால் பரிசு கேட்கலாம். அல்லது நூறு மீட்டர் ஓட்டப் போட்டியில் திறமாகச் செய்தால் ஏதாவது தரலாம். நல்ல நடத்தைக்கு யாராவது பரிசு கொடுப்பார்களா?' 'ஓ. கடவுளே! என் வாழ்நாளே முடிந்தது. பத்தாயிரம் மைல்கள் பறந்து வந்தது என்னுடைய நல்ல பழக்கத்தை காட்டவா?' 'சரி. சரி. புலம்பாதே. இன்னும் சில நிமிடங்கள்தான். நீ என்றென்றைக்கும் மறக்கமுடியாத ஒரு நாளாக இது இருக்கும்.'

'நம்பமாட்டேன்.'

'கம்பளிப்புழு வண்ணத்துப்பூச்சியாக மாறும் நாள். ஒருமுறை மாறியபின் அது மறுபடியும் கம்பளிப் புழுவாக முடியுமா?'.

'அது எப்படி? வண்ணத்துப்பூச்சி வண்ணத்துப்பூச்சிதான்.'

'அதேதான். உன்னுடைய வாழ்விலும் அப்படியான ஒரு தருணம் இது.'.

'நான் உரு மாறப் போகிறேனா?'

'மக்கு, மக்கு' என்று அகிலா அவன் தலையில் செல்லமாகக் குட்டினாள்.

அகிலாவுக்கு கொஞ்சம் சிங்களம் தெரியும். என்ன பேசவேண்டும் என்பதை மனதுக்குள் அடுக்கிக் கொண்டாள். அந்த வீதியில் எல்லாமே மூன்று, நான்கு அறை கொண்ட வீடுகள். அஸ்பெஸ்டஸ் கூரைகள். பூக்கன்றுகள் நிரையாக நடப்பட்டிருந்தன. நல்ல பராமரிப்பு இருந்ததால் அந்தூரியம், கார்னேசன், ரோஜா, போர்கன்வில்லா போன்ற பூக்கள் பூத்துக் குலுங்கின.

சாரதி வழியில் போன ஒருவரிடம் சிறீபாலா என்று விசாரித்தார். அவர் ஒரு வீட்டை சுட்டிக்காட்டிவிட்டு சென்றார். 'ஒரு சாதாரண ராணுவச் சிப்பாயின் வீடு இத்தனை பெரிதா?' என்று அகிலா நினைத்தார். சாரதியை காத்திருக்கச் சொல்லிவிட்டு ஆகவியை கையிலே பிடித்துக் கொண்டு முன்னேறினார். அழைப்பு மணியை அடித்ததும் ஒரு பெண் வந்து கதவை திறந்தார். வீட்டு உடையில் இருந்தார். 14 சைஸ் உடம்பை 12 சைஸ் உடைக்குள் நுழைத்திருந்ததால், சதை கொஞ்சம் பிதுங்கியது. ஆனால் மலர்ந்த முகம். கழுத்திலே தடித்த சங்கிலிகள். இரண்டு கைகளிலும் முழங்கைவரை காப்புகள். முப்பது வயதுக்குள்தான் இருக்கும். 'யார் வேண்டும்?' என்று தயக்கத்துடன் கேட்டார். 'சிறீபாலா' என்று அகிலா சொல்ல 'ஆ! வாருங்கள் உள்ளே' என்று அரைப் புன்னகையுடன் வரவேற்றார். அவர் வாய் அப்படிச் சொன்னாலும் முகத்திலே கொஞ்சம் கலவரம் கிடந்தது. '

'என் பெயர் அகிலா. நான் கனடாவிலிருந்து வருகிறேன். இது என் மகள் ஆகவி' என்றார். அந்தப் பெண் ஒன்றுமே புரியாமல் மிரள மிரளப் பார்த்தார். சத்தம் கேட்டு உள்ளேயிருந்து ஒரு சிறுமி ஓடிவந்தாள். அவளைக் கண்டதும் அகிலாவுக்கும் ஆகவிக்கும் ஒரே அதிர்ச்சி. கண்ணாடி உருவம் போல அந்தச் சிறுமி ஆகவியைபோலவே அச்சாக இருந்தாள். அதே உயரம், அதே சுருட்டை முடி, அதே நீட்டு கண்கள். 'இவள் என் மகள், அசுந்தா. ஏதாவது குடிக்கிறீர்களா?' என்றார் .'தண்ணீர் மாத்திரம்' என்றார் அகிலா. 'அவர் லீவிலே வந்து நிற்கிறார். இன்னும் இரண்டு நாளில் திரும்ப வேண்டும். சந்தையிலிருந்து இதோ இப்போது வந்துவிடுவார்" என்று கூறியபடியே சமையலறையை நோக்கி நடந்தார். ஆகவியும் சிறுமியும் ஒருவரை ஒருவர் திகைப்புடன் பார்த்தபடி நின்றனர். சிறீபாலாவின் மனைவி சமையலறையிலிருந்து தண்ணீருடன் திரும்பிய அதே நேரத்தில் சைக்கிளில் வந்து சாவதானமாக குதித்தான் சிறீபாலா. மீன், மரக்கறி ஆகிய சாமான்களைப் பையிலே காவிக்கொண்டு. வீட்டுக்குள் சிரித்தபடி காலடி வைத்தான். அந்தக் கணத்திலிருந்து அவனுடைய வாழ்க்கை மாறப்போகிறது அவனுக்கு தெரியாது.

அகிலா எழுந்து நின்றாள். அகிலாவையும் ஆகவியையும் கண்டு திடுக்கிட்டுப்போய் ஓர் அடி பின்வாங்கினான். ஆகவியை பார்த்து பின் தன் மகளைப் பார்த்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவனுடைய மனைவி பிரமை பிடித்துப்போய் நின்றாள். ஏதோ கெட்ட ஆவி நுழைந்துவிட்டது என்ற எண்ணம் அவனுக்குள் எழுந்தது.

அகிலா சிறீபாலாவைப் பார்த்தாள். அதே முகம் அதே உடைந்த பல். அவன் சிரிப்பு தலைகீழாக வந்தது. எதை சொல்வது, எதை உள்ளே வைப்பது என்பதை தீர்மானித்துக்கொண்டு துண்டு துண்டாகப் பேசினாள். 'ஜெயசிக்குறு போர் நடவடிக்கை. 21 நவம்பர் 1997. வெள்ளிக்கிழமை. மாங்குளம். இரவு ஒரு மணி. ராணுவ வாகனத்தில் உன் கூட்டாளியுடன் வந்திறங்கி என் வீட்டுக் கதவை

உடைத்தாய். என் அம்மாவின் தலையில் உன் சிநேகிதன் துப்பாக்கி கட்டையால் இடித்தான். . இது உன் மகள். பெயர் ஆகவி. இவளுடைய அப்பாவை காட்ட கனடாவில் இருந்து வந்திருக்கிறேன்.' சிறீபாலாவின் மனைவி ஈரச் சேலை கொடியறுந்து விழுந்ததுபோல சத்தமாக நிலத்தை அறைந்து விழுந்தாள். தண்ணீர் சிதறியது. சிறீபாலா சற்று வாயை திறந்தபடி வெலவெலத்துப்போய் அப்படியே நின்றான்.

ஆகவியின் கையை பிடித்து இழுத்தபடி அகிலா ஓடிப்போய் காத்திருந்த ஆட்டோவில் ஏறினாள். சாரதி சீப்பினால் தலையை வாரிக்கொண்டு நின்றான். 'சீக்கிரம், சீக்கிரம்' என்றாள். ஆகவிக்கு அவர்கள் பேசியது ஒன்றுமே புரியவில்லை. என்ன நடந்தது என்பதை அவளுடைய சின்ன மூளை கிரகிக்கவில்லை. ஆட்டோ நகரத் தொடங்கியதும் ஏதோ பெரிய இக்கட்டிலிருந்து அவர்கள் தப்பி ஓடுவது அவளுக்கு தெரிந்தது. அம்மாவின் முகத்தை பார்த்தாள். உணர்ச்சிப் பெருக்கில் அது நனைந்து வேறு யாருடைய முகமாகவோ மாறிவிட்டது. 'நான் நல்ல பிள்ளையாக நடந்தேனா? அது யார்? என் பெயரை ஏன் சிங்களத்தில் சொல்லவில்லை?' என்றாள் ஆகவி.

அகிலா அவளைக் கட்டிப்பிடித்து முத்தமிட்ட. பின்னர் சொன்னார். 'அவனுடைய பெயர் சிறீபாலா. அவன்தான் உன்னுடைய அப்பா. அவன் முகத்தை உன் நினைவில் அழுத்தமாகப் பதிவு செய். இதுதான் கடைசி. இனிமேல் நீ அவனை பார்க்கவே போவதில்லை.'

'அப்ப அசுந்தா? அவளுக்கு அம்மா, அப்பா யார்?'

'இன்றிலிருந்து அசுந்தா தனி அம்மா பிள்ளை.'

'என்னைப்போலவா?'

'உன்னைப்போலவேதான்.'

## அமுதநதி நெஞ்சங்கள்

வணக்கம். நான் வவுனியாவில் உள்ள பிரபல பாடசாலையின் ஆசிரியர். தங்கள் அமுதநதி பார்த்தேன். நன்று. பாடசாலை சார்ந்த விடயங்களை இணைத்துக்கொண்டால் சிறப்பு. உதவிகள் தேவைப்படின் தொடர்பு கொள்ளுங்கள்.
(முகநூலில் தொடர்பிலக்கம் அனுப்பியுள்ளேன்.)

திரு.ப.சிவராமன், வவுனியா.

ஆசிரியரே... வணக்கம். நான் கிளிநொச்சியில் இருக்கிறேன். அமுதநதி சஞ்சிகை வவுனியாவில் இருக்கும் என் நண்பியின் ஊடாகத்தான் கிடைத்தது. பார்த்ததும் மகிழ்ந்தேன். பலதரப்பட்ட விடயங்களை சேர்த்துள்ளீர்கள். ஆனால், அவைகளைப் படித்தபின் போதாமலிருப்பது போலுள்ளது இன்னும் நிறைய விடயங்களை எதிர்பார்க்கிறேன். என் போன்ற வாசகர்களின் மனதில் நிச்சயம் இடம்பிடிக்கும். வாழ்த்துக்கள். எழுத்துப் பிழைகளை கவனிக்கவும். குறிப்பு: கிளிநொச்சி புத்தககடைகளில் கிடைக்கப் பெற்றால் எம்போன்றவர்களுக்கு வாங்கிப்படிக்க இலகுவாக இருக்கும். நன்றி.

சி.ஜனனி
மின்சார நிலைய வீதி, கிளிநொச்சி.

வாசகர்களிடமிருந்து இன்னும் பல கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.
உங்களுடைய கருத்துக்கள் ஒன்றே அமுத நதியை பரந்து பலமனங்களையும் சென்றடையச் செய்யும் என்பது திண்ணம். எமது வழமையான முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# செழுமையான பாடசாலை கலாசாரத்தை கட்டியெழுப்புவதில் ஆசிரியர்களின் பங்கு

க.சுவர்ணராஜா

பாடசாலை என்பது அதிபர் ஆசிரியர் மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரை இணைத்துச் செயற்படுத்தும் ஒரு நிறுவனமாகும். இந்நிலையில் அப்பாடசாலையில் பணியாற்றுவோர் பயன்பெறுவோர் யாவரும் நாங்கள் இங்கே எவ்வாறு செயற்படுகின்றோம்? எங்களது செயற்பாடுகளை நாங்கள் எவ்வாறு வெற்றி கொள்கின்றோம்? என்பதை வெளிப்படுத்துவதாக அமைவதே பாடசாலைக் கலாசாரமாகும். பாடசாலையின் அங்கத்தவர்கள் தமது செயற்பாடுகளை முழுமையாக வெளிப்படுத்தும் நிலையில் பார்வையாளர்களால் அப்பாடசாலையின் கலாசாரம் பற்றி தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்துவமான அதற்கேயுரித்தான கலாசாரம் ஒன்று உண்டு. அப்பாடசாலைக் கலாசாரமே அப்பாடசாலையின் பயன்தரு நிலையினை தெளிவாக பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். மனிதனின் நடத்தைக் கோலங்களில் பெரும்பாலானவற்றை நிர்ணயிப்பதில் பாடசாலையின் கலாசாரம் சிறப்புற்றிருக்கும்போது பாடசாலை நன்மதிப்பினை சிறப்புமிகு நடத்தைக் கோலங்ளை உருவாக்கவதிலும் சாத்தியமான நிலையை எய்துகின்றது எனலாம்.

பாடசாலை என்பது அதிபர் ஆசிரியர் மாணவர்கள் மற்றம் கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரை இணைத்துச் செயற்படும் ஒரு நிறுவனமாகும். இந்நிலையில்அப்பாடசாலையில் பணியாற்றுவோர் பயன்பெறுவோர் யாவரும் நாங்கள் இங்கே எவ்வாறு செயற்படுகின்றோம் எங்களது செயற்பாடுகளை நாங்கள் எவ்வாறு வெற்றி கொள்கின்றோம் என்பதை வெளிப்படுத்துவதாக அமைவதே பாடசலைக் கலாசாரமாகும். பாடசாலையின் அங்கத்தவர்கள் தமது செயற்பாடுகளை முழுமையாக வெளிப்படுத்தும் நிலையில் பார்வையாளர்களால் அப்பாடசாலையின் கலாசாரம் பற்றி தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

பாடசாலைக்கு புதிதாக நியமனம் பெற்று வரும் ஆசிரியர்கள் அப்பாடசாலையில் ஏற்கெனவே கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து அப்பாடசாலையியின் கலாசாரத்தை தெளிவாக புரிந்துகொள்கின்றனர். குறிக்கப்பட்ட பாடசாலையில் ஏற்கனெவே கடமையாற்றும் ஆசிரியர்கள் அப்பாடசாலையில் கலாசாரத்தை தெளிவாக புரிந்துகொள்கின்றனர். குறிக்கப்பட்ட பாடசாலையில் ஏற்கெனவே கடமையாற்றும் ஆசிரியர்கள் அப்பாடசாலை தொடர்பாக பெற்றுள்ள பிரதிபலிப்புக்கள் வெளிப்படுத்தும் கண்ணோட்டங்கள். முன்வைக்கும் விமர்சனங்கள் என்பவற்றிலிருந்தும் அவ் ஆசிரியர்களால் வெளிக்காட்டப்படும் நடத்தைக்கோலங்கள் அறிவுறுத்தல்கள் வழிகாட்டல்கள் என்பவற்றிலிருந்தும் புதிய ஆசிரியர்கள் பாடசாலை கலாசாரம் தொடர்பாக தெளிவு பெறுகின்றனர்.


pulsar
DEFINITELY MALE
இன்றும் என்றும்
சிறந்த சலுகை நிறைந்த இடம்
ஸ்ரீ ஹரி ஹவுஸ்
முன்னணி லீசிங் கம்பனிகளின் விசேட நிதி வசதிகள்.
குறைந்த முற்கட்டணம் மற்றும் குறைந்த தவணைக் கட்டணம்
கூடிய மீள்செலுத்துவதற்கான கால வரையறை
குறைவான பத்திரங்கள் மற்றும் துரித சேவை
Robin
Water Pump
இல: 27, 1ம் குறுக்குத் தெரு, வவுனியா.
077 6152718, 077 5096998, 024 2224282
SRI HARIE HOUSE
BAJAJ
No: 27, 1st Cross Street, Vavuniya.
077 6152718 / 024 2224282
THEEPAN
077 5096998



# Eye Care Optical

ஐ கெயார் ஒப்டிக்கல் අයි කෙයා ඔප්ටිකල්

**கணனி மூலம் கண் பரிசோதிக்கப்பட்டு**
**கண்ணாடி வழங்கப்படும்**

## Computer Eye Testing



024 2228058, 077 5717676

# 55, Busstand, Kandy Road, Vavuniya.
# 49, Bus Stand Compex, Vavuniya.

ஓர் பாடசாலைக்கு புதிதாக வந்து சேரும் மாணவர்கள் அப் பாடசாலையில் ஏற்கனவே கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களின் நடத்தைக் கோலங்களிலிருந்து பாடசாலைக் கலாசாரத்தைக் கற்றுக்கொள்கின்றனர். ஒரு பாடசாலையில் புதிதாக தங்களது பிள்ளைகளை சேர்க்க வரும் பெற்றோர்கள் ஏற்கெனவே அப்பாடசாலையில் கற்றுக்கொண்டிருக்கும் பிள்ளைகளின் பெற்றோர்களிடமிருந்து அப்பாடசாலைக் கலாசாரத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்கின்றனர்.

பாடசாலைக் கலாசாரமென்பதை வெளிக்காட்டும் பிரதான விடயமாக அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் என்பவர்களது நடத்தைக் கோலங்கள் அமைகின்றன. எனவே ஒரு பாடசாலை தொடர்பாக அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் கொண்டுள்ள பாடசாலை தொடர்பான விருப்பத்தின் அளவு அக்கறையின் தன்மை என்பனவே பாடசாலைக் கலாசாரத்தை வெளிப்படுத்துவதில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒரு ஆசிரியர் அவர் கற்பிக்கும் பாடசாலை மீது அதிக பற்றுணர்வு கொண்டிருக்கும் போது அவரது பாடசாலையின் கலாசாரம் பற்றியதான வெளிப்பாட்டுணர்வு நேரானதாக அமையும். மாறாக பற்றுணர்வு குறைவாக காணப்படின் அவர் பாடசாலையினுள் நிலவும் கலாசாரத்தை விரும்பாதவராகவே வெளிக்காட்டிக்கொள்ள முயல்வார். இந்நிலையில் இவரது நடத்தைக் கோலத்தை அவதானிக்கும் ஒருவரது மனதிலும் பாடசாலை கலாசாரம் பற்றி குறைவானதொரு மதிப்பீடு எழ வாய்ப்புண்டு.

**பாடசாலைக் கலாசாரம் வெளிப்படுத்தும் சில பிரதான அம்சங்கள்**

பாடசாலை கலாசாரமொன்றினை கூர்ந்து அவதானித்தால் நாம் பின்வரும் விடயங்களை அங்கு காணமுடியும்.

பாடசாலையினுள் செயற்படும் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றார்களா? அல்லது அவர்களிடையே முரண்பாடுகளும் ஒத்துழைப்பின்மையும் காணப்படுகின்றதா?

பாடசாலையின் நோக்கை தெளிவாகப் புரிந்துகொண்டு ஆசிரியர்களும் மாணவர்களும் அதனை வெற்றிகரமாக அடைவதற்கு தமது முழு ஆற்றல்களை வெளிபடுத்துகின்றனரா? அல்லது தமது எதிர்ப்புணர்வை மறைமுகமாக வெளிப்படுத்துகின்றனவா.

ஆசிரியர்கள் மனநிறைவுடன் கற்பித்தலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனரா? அல்லது வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச்செல்வதற்கான நாட்களை அல்லது ஒய்வு பெறுவதற்கான நாட்களை எண்ணிக்கொண்டிருக்கின்றனரா?

பாடசாலை எவ்வளவு தூரத்திற்கு தன்னையொரு பயன்தரு பாடசாலையாக நிலை நிறுத்துவதில் வெற்றியடைந்துள்ளது?

மேற்கண்ட விடயங்களை நோக்கும் போது ஆசிரியர்களின் நடத்தைக் கோலங்களே பெருமளவுக்கு பாடசாலையின்கலாசாரத்தினை கட்டியெழுப்புவதில் அடித்தளமாகஉள்ளது என்பது புலனாகிறது.

TelFord ( 1996) என்பார் பாடசாலை கலாசாரம் என்பதை பின்வருமாறு வரையறுக்கின்றார்.பாடசாலை கலாசாரம் என்பது நிலத்தின்அடியில் ஓடிக்கொண்டிருக்கும் கண்களுக்குத் தெரியாத சிறு சிறு பிணைப்புக்களைக் கொண்ட நீரோட்டம் போன்றதாகும். இங்கே சிறு சிறு பிணைப்புக்கள் எனப்படுவது பாடசாலை ஆசிரியர்களிடையே மாணவர்களிடையே காணப்படும் சமவலுவுள்ள பரஸ்பர உணர்வுகளும் பற்றுதல்களும் ஆகும். பாடசாலையின் வெற்றிக்கான செயற்பாடுகளை தெரிவு செய்வதிலும் அவற்றை முன்னுரிமைப்படுத்தி செயலாக்குவதிலும் இச்சமவலுவுள்ள உணர்வுகளும் பற்றுதல்களும் நூலிடை தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இத்தொடர்புகள் அல்லது பிணைப்புக்கள் பாடசாலை மட்ட தீர்மானமெடுத்தலில் உச்ச மட்டத்திலான பங்குபற்றுதலை எப்போதும் உறுதி செய்துகொண்டிருக்கும்.

மேற்கண்ட வரைவிலக்கணத்தினை நோக்கினால் பாடசாலையின் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் பற்றுதலை அடிப்படையாகக் கொண்ட பிணைப்புக்களே பாடசாலை கலாசாரத்தை கட்டியெழுப்பவதற்கான அடிப்படைகள் என்பதனை வலியுறுத்துவதாக உள்ளது.

"மனம் ஒன்றி வேலை செய்யாத ஒருவரால் முழு வெற்றியை அடைய முடியாது. அரைகுறை மனத்துக்கு கிடைத்த வெற்றி கசப்புணர்வைப் பரப்பும்" என்பது இந்திய விஞ்ஞானி அப்துல் கலாமின் கூற்றாகும். ஆசிரியர்களாக பணியாற்றிக்கொண்டு வியாபாரம் பற்றியோ அல்லது வேறு தொழில்கள் பற்றியோ கனவுகளில் மிதந்திருந்தால் அவர்களது கற்பித்தல் மாணவர்களின் அறிவுத்தாகத்தை பாதிதான் தணிக்கும். இந்நிலை மனங்களில் கசப்புணர்வையே விதைக்கும் என்பது இவரது வாதமாகும். எனவே ஆசிரியர்களின் பற்றுணர்வு மிக்க கற்பித்தலே பாடசாலையின் சிறப்புமிகு கலாசாரத்திற்கு வித்திடுகின்றது என்பது தெளிவாகின்றது.

"எங்களது கணிதப்பாட ஆசிரியர் எப்போதாவது தான் பாடசலைக்கு வருவார் அதிலும் சில நாட்கள் மட்டும் தான் வகுப்பறைக்கு வருவார். அப்படி வரும் நாட்களில் சில நாட்கள் மட்டுமே கற்பித்தலில் ஈடுபடுவார். அதிலும் சிலபாடவேளைகளில் மட்டுமே பயிற்சி தந்து கொப்பிகளை திருத்துவார்" இக்கூற்றினை 10ஆம் தர மாணவன் ஒருவன் வெளிப்படுத்திய கூற்றாக நாம் கொண்டால் இப்பாடசாலையில் கணிதப் பாடத்தை கற்பிக்கும் நிலை ஆசிரியர்களின் லீவு ஆசிரியர்கள் மீதான உள்ளக மேற்பார்வை மாணவர் மீதான பாடசாலையின் அக்கறை பாடசாலையின் பயன்தரு நிலை என்பன மற்றவர்களால் இலகுவாக புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். ஆகவே பாடசாலையினுள் எழும் ஒவ்வொரு நடத்தைக்கோலமும் பிணைப்புகளும் பாடசாலைக் கலாசாரத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன எனலாம்.

**பாடசாலை கலாசாரத்தை கட்டியெழுப்ப தேவையான தோற்றப்பாடுகள்**

பாடசாலை காலாசாரத்தை சிறப்பாக கட்டியெழுப்புவதற்கு பின் வரும் தோற்றப்பாடுகளை விருத்தி செய்ய வேண்டுமென Beare என்பார் குறிப்பிடுகின்றார்.

1. பாடசாலை தொடர்பான தெளிவானஇலட்சியத்தை ஆசிரியர்கள் அனைவரும் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்பதை பாடசாலை முகாமைத்துவம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

2. பாடசாலையின் இலட்சியத்துடன் பிணைக்கப்பட்டதாக ஆசிரியர்களின் தொலைநோக்கு பணி இலக்கு அமைக்கப்படல் வேண்டும். ஆசிரியர்களின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் செயற்பாட்டுக் கூறுகளிலும் பாடசாலை இலட்சியம் பின்னணியாக அமையும் நிலையினை தொடர்ச்சியாக ஊக்குவித்தல் வேண்டும்.

3. பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து செயற்படுவதற்கான நன்கு ஒழுங்க மைக்கப்பட்ட வேலைத்திட்ட மொன்று நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

4. ஆசிரியர்களிடையே மாணவர்களிடையே ஆசிரியர்கள் மாணவர்களிடையே ஏற்படும் இடைத்தாக்கங்கள் தரமும் விருத்திசார் நோக்கும் கொண்டதாகவும் நேர்த்தியாக கட்டியெழுப்பப்பட்ட விழுமிய தொகுதியொன்றினை சார்ந்திருப்ப தனையும் தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு ஊக்கவிக்கும் சூழ்நிலை ஏற்படுத்தப்படல் வேண்டும்.

5. அறிவுபூர்வமான நம்பிக்கைகள் வரலாற்று நோக்குகள், கலாசார மரபுரிமைகளை பாதுகாத்தல் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்ட செயற்பாடுகளை ஆற்றுவதற்கான சுதந்திரமும் சந்தர்ப்பமும் ஊக்குவிப்புகளும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படல் வேண்டும்.

செழுமையான பாடசலைக் கலாசாரமொன்றை கட்டியெழுப்புவதற்காக பாடசாலை ஆசிரியர்கள் பின்வரும் விடயங்களில் நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டியது அவசியமாகும். அவையாவன

**1. பாடசாலை ஒரு கூட்டுச் சமூகமாகும்.**

ஒரு கூட்டுச்சமூகம் என்னும் போது அங்கு பரஸ்பர நம்பிக்கையுணர்வும் செயற்பாடுகளில் பங்காளிகளாக இயங்கும் நிலையும் காணப்படும். ஆகவே பாடசாலையொன்றின் அனைத்துச் செயற்பாடுகளும் எல்லோரையும் ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் என்ற நம்பிக்கை ஆசிரியர்களிடையே ஏற்படல் வேண்டும். நமது ஒவ்வொருவரது பங்களிப்பும் உச்சமட்டத்தில் காணப்படும் நிலையில் மட்டுமே பயன்தரு பாடசாலையைக் கட்டியெழுப்ப முடியும். இதன்

மூலமே நம்பிக்கை வைத்து செயற்படும் குழு மன உணர்வு தோன்றமுடியும். ஒருவரின் செயற்பாடுகளில் மற்றவர்கள் தாங்களாகவே முன்வந்து உதவும் நிலையும் வெற்றியை குழுவாகப் பகிர்ந்து கொள்ளும் நிலையும் பின்னடைவுக்கான காரணிகளை ஒருமித்து தேடும் மனப்பக்குவமும் ஏற்படவேண்டும்

**2. பொது இலக்கின் மீது நம்பிக்கை கொள்ளல்**

செழுமையான கலாசாரத்தை பாடசாலையினுள் கட்டியெழுப்ப ஆசிரியர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டியதொரு மற்றுமொரு விடயம் பொது இலக்காகும். பாடசாலையின் பொது இலக்கு எம்மால் தீர்மானிக்கப்படல் வேண்டும். அதனை அடைவதற்காகவே நமது எல்லாச் செயற்பாடுகளையும் திட்டமிடவேண்டும் இந்த நம்பிக்கையுணர்வு இல்லாத நிலையில் ஆசிரியர்களினால் சிறப்பான கலாசாரமொன்றை பாடசாலையினுள் கட்டியெழுப்ப முடியாதிருக்கும்.

தேசிய கலைத்திட்ட மாற்றங்களை எதிர்த்தபடி அல்லது மாற்றங்களை உள்வாங்க முடியாத ஆசிரியர்கள் பாடசாலையின் பொது இலக்குகளின் மீது நம்பிக்கை வைக்கத் தயங்குகின்றனர். ஆக்கபூர்வமான விமர்சனமோ அல்லது பொது இலக்கினை திருத்தியமைப்பதற்கான உந்து சக்தியோ இன்றி மௌனமாக அல்லது விரக்திப்போக்குடன் ஆசிரியர்கள் கடமையாற்றும்போது அவர்களது நடத்தைக் கோலங்கள் பாடசாலையின் கலாசாரவிருத்திக்கு தடையாக அமைகின்றன.

**3. பாடசாலை மட்டத்தில் பிரச்சினைகளைத் தீர்த்தல்**

பாடசாலை மட்டத்திலேயே சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை கொள்ளும் மனப்பாங்கு ஆசிரியர்களிடம் காணப்பட வேண்டும். இது பாடசாலை கலாசார விருத்திக்குத் தேவையான ஒரு விடயமாகும். பாடசாலையின் வெற்றிக்குத் தடையாக உள்ள சவால்களை வென்றெடுக்கவும் பாடசாலை மட்டதில் எழும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவும் கூட்டாக இணைந்து செயற்படுதல் சிறந்த உபாயமாகும். ஆசிரியர்கள் தனித்தனியே பிரிந்து செயற்படுத்தல் அல்லது தாம்சார்ந்த காரணிகளை மட்டும் முன்னிலைப்படுத்தி பிரச்சினை தீர்க்கப் முற்படல் என்பன மேலும் மேலும் புதிய பிரச்சினைகள் தோன்றுவதற்கு வாய்ப்பாக அமையக்கூடும். ஆகவே கூட்டாக இணைந்து பிரச்சினை தீர்க்கும் திறன்கள் வேண்டும்.

**4. உயர்வான எதிர்பார்ப்புகளுடன் இயங்குதல்**

பாடசாலை மட்டத்தில் சிறப்பானதோர் கலாசரத்தை கட்டியெழுப்புவதற்கு ஆசிரியர்கள் உயர்வான எதிர்பார்ப்புக்களுடன் இயங்குதல் அவசியமானதாகும். எந்தவொரு செயற்பாட்டினதும் இறுதிப் பெறுபேறு உயர்வானதாகவும் தரமானதாகவும் இருக்க வேண்டும். இந்த எதிர்பார்ப்பானது ஆசிரியரின்

செயற்பாடுகளில் நல்விருத்தியை ஏற்படுத்தும். ஆகவே உயர்மட்ட இலக்குகளில் நம்பிக்கை கொள்வது அவசியமானதாகும்.

### 5. குழுக்களிடையே நம்பிக்கைத்தன்மை

பாடசாலையின் நாளாந்த நிலைப்பாட்டுக்காக எதிர்கால விருத்திக்காக பல்வேறு குழுக்கள் காணப்படுகின்றன. இவை தற்காலிக குழுக்களாகவோ அல்லது நிரந்தரக் குழுக்களாகவோ காணப்படலாம். ஆனால் அவற்றின் நோக்கம் முகாமைத்துவ அதிகாரப் பரவலாக்கல், பிரச்சினை தீர்தலில் ஒன்றிணைதல், தகவல் பரிமாற்றம், தொடர்ச்சியான இடைவினையாற்றுகை என்பனவாகவே இருக்கும் இந்த நிலையினை நேர்நிலையாக எல்லோரும் பின்பற்றிச் செயற்படின் பாடசாலைக் கலாசார விருத்தியாக்கல் வளர்ச்சி அடையும்.

மேலும், பாடசாலையில் அவ்வப்போது ஏற்படுத்தப்படும் தற்காலிக குழுக்களுக்கு பாடசாலை மட்டத்தில் காணப்படும் நிரந்தரக்குழுக்கள் வழங்கும் ஒத்துழைப்பும் கலாசார விருத்திக்கு அவசியமானதொன்றாகும். உதாரணமாக பாடசாலையின் பரிசளிப்பு விழாவை கொண்டாடுவதற்கு அமைக்கப்பட்ட தற்காலிக குழுவுக்கு பாடசாலையின் முகாமைத்துவக் குழு பூரண ஒத்துழைப்பினை வழங்குதல் வேண்டும். அப்போதுதான் பரிசளிப்பு விழா தொடர்பான குழு ஊக்கத்துடன் இயங்க முடியும். ஆனால் பல்வேறு பாடசாலைகளில் காணப்படும் நிரந்தர குழுக்களுக்கும் தற்காலிக குழுக்களுக்கும் இடையிலான உறவு திருப்திகரமாக இல்லை. இந்த ஒத்துழைப்பின்மை பாடசாலைக் கலாசாரத்தைப் பாதிக்கின்றது.

### 6. ஆசிரியர்கள் முன்மாதிரியாக நடத்தல்

பாடசாலை கலாசாரம் என்பது மாணவர்கள் வாழ்க்கை முழுவதும் கற்பவர்களாக வளர்வதற்கு உதவும் வகையில் காணப்பட வேண்டுமென்ற நம்பிக்கை ஆசிரியர்களிடையே அதிகரித்தல் வேண்டும். தனித்து வகுப்பறைகளில் பாடங்களைக் கற்பது மாத்திரம் வாழ்க்கை முழுவதற்குமான கற்றலை ஊக்குவிக்க போதுமானதல்ல. பாடசாலையின் சகல செயற்பாடுகளும் ஆசிரியர்களின் முன்மாதிரியான நடத்தைகளும் மாணவர்கள் கற்பதற்கான விடயங்களாக ஒழுங்குமைக்கப்படல் வேண்டும். ஒரு மழைக்காலத்தில் ஆசிரியர்களின் குடைகள் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் நேர்த்தியும் ஒழுங்கும்கூட மாணவர் கற்பதற்கானஒரு பாடமாக அமையலாம்.

### 7. வளப்பகிர்வில் உண்மைத்தன்மையுடன் நடத்தல்

பாடசாலை கலாசார விருத்திக்காக ஆசிரியர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டியதொரு சிறப்பான விடயம் வளப்பகிர்வில் உண்மைத்தன்மையுடன் நடத்ததலாகும். அருமையாக காணப்படும் பாடசாலை வளங்களை எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாகவும் பொருத்தமாக பயன்படுத்துதலில் ஆசிரியர்கள் உண்மைத் தன்மையுடன் நடந்து கொள்ளவேண்டும். உதாரணமாக பாடசாலையின் ஒரு விஞ்ஞான ஆய்வுக் கூடத்தினை

பாடசாலையிலுள்ள சகல விஞ்ஞான ஆசிரியர்களும் பயன்படுத்துதல் தொடர்பான விஞ்ஞான ஆசிரியர்களிடையே புரிந்துணர்வான ஒரு எழுதப்படாத உடன்படிக்கை காணப்படல்வேண்டும். அவசியமானவேளைகளில் விட்டுக்கொடுத்தல் ஒருவருக்கொருவர் உதவுதல் என்பன இங்கு கவனத்திற்க் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும்.

## 8. பெற்றோரின் ஈடுபாடு நன்மையானதே என்ற நம்பிக்கை

பாடசாலையின் செயற்பாடுகளில் பெற்றோரின் ஈடுபாடு நன்மையானதே என்ற நம்பிக்கை ஆசிரியர்களிடையே கட்டியெழுப்பப்படும் போது பாடசாலையின் கலாசார விருத்தியில் சிறப்பான அடியெடுப்புக்கள் இடம்பெற வாய்ப்புண்டு. மாணவர்களின் அபிப்பிராயங்களில் விழுமியங்களில் இடைத்தாக்கத் திறன்களில் பெற்றோரின் நுணுக்கமான செல்வாக்கு உண்டு. எனவே பெற்றோரை இணைத்து செயற்படல் பாடசாலையின் பாதுகாப்பிற்கும் அவசியமானதாகும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன் பாடசாலை தொடர்பாக நேர்நிலை மனப்பாங்குடன் கலந்துரையாடும் வகையில் பாடசாலை உடனான பெற்றோர் தொடர்புகள் வலுப்படுத்தப்படல் வேண்டும். சில ஆசிரியர்கள், பெற்றோர்கள் பாடசாலைச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்தமது செயற்பாடுகளுக்கு இடைஞ்சலாக அமையும் அல்லது பாடசாலையின் செயற்பாடுகளில் பங்கேற்க அவர்களுக்கு அனுபவம் இல்லை என கருதி பெற்றோர்களை ஒதுக்கி வைக்கின்றனர். இந் நிலையில் பெற்றோர் பாடசாலை தொடர்பான எதிர்மறையான கருத்துக்களுக்கே பெரிதும் செவி சாய்ப்பவர்களாக மாறிவிடுகின்றனர். இதுவும் பாடசாலை கலாசார விருத்தியைப் பெரிதும் பாதிக்கின்றது. ஆகவே ஆசிரியர்கள் பெற்றோரின் பாடசாலையின் உடனான ஈடுபாட்டினை ஊக்குவிப்பவர்களாக மாறுதல் வேண்டும்.

பாடசாலை கலாசாரமென்பது மாணவர் உறவுகள், ஆசிரியர்களின் ஒத்தாசை, பௌதீக வள கவின்நிலை, முரண்பாட்டுத் தீர்வுகள், தீர்மானமெடுத்தலில் பங்களிப்பு, செழுமையான கலைத் திட்ட அமுலாக்கம், ஆலோசனை சேவைமாற்று ஏற்பாடுகள் தனிப்பட்ட அழுத்தங்களை குறைத்தல் போன்ற வற்றின் நேர் நிலை மாற்றங்களில் தங்கியுள்ளது. எனினும் ஆசிரியர்களின் பங்களிப்பு இங்கு அத்தியாவசியமானதாகும்.

பாடசாலை கலாசாரம் பொருத்தமான இலக்குகளை அமைத்துக் கொள்வதிலும் விவேகமான நடைமுறைப்படுத்தலிலும் ஒரு பொது உடன் படிக்கை அமைய ஆசிரியர்கள் உதவுதல் வேண்டும்.

**பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்**

(யாரோ ஒருவர்)

# நம்பினார் கெடுவதில்லை



களங்கமற்ற, முழுமையான இறை நம்பிக்கை, இறைவனை நம்மிடம் நேரில் கொண்டு வந்து காட்டும் என்பதற்கு உதாரணமாக திகழ்ந்தவர் நம்பியாண்டார் நம்பி.

இவர், சோழ நாட்டில் தில்லையம்பலமான சிதம்பரம் அருகிலுள்ள திருநாரையூரில் அவதரித்தார். இங்குள்ள பொள்ளாப்பிள்ளையார் கோவில் மிகவும் பிரபலமானது. "பொள்ளா' என்றால், உளியால் செதுக்கப்படாதது என்று பொருள் அதாவது, தானாகவே தோன்றிய சுயம்பு விநாயகர் அவர்.

இந்த விநாயகருக்கு பூஜை செய்து வந்தார் நம்பியின் தந்தை நம்பிக்கும் பூஜை முறைகளைக் கற்றுக் கொடுத்தார். ஒருநாள், அவர் தன் மனைவியுடன் வெளியூர் செல்ல இருந்ததால், மகனிடம், "இன்று, நீ போய் விநாயகருக்கு நைவேத்யம் செய்து பூஜை செய்து வா' என்றார்.

மகிழ்ச்சியடைந்த சிறுவன் நைவேத்திய பொருட்களுடன் கோவிலுக்குச் சென்றான். விநாயகரை வணங்கி நைவேத்யத்தைப் படைத்தான்.

"அப்பனே, விநாயகா! நான் சின்னஞ்சிறுவன். அப்பா ஊருக்குப்போய் விட்டார். உனக்கு தேங்காய், பழம், பொங்கல் கொண்டு வந்திருக்கிறேன். ஒன்று விடாமல் சாப்பிடு. குருகுலத்துக்கு கிளம்ப வேண்டும். தாமதமாகச் சென்றால், ஆசிரியர் கோபிப்பார். விரைவில் சாப்பிடப்பா' என்றான்.

பிள்ளையார் என்றாவது சாப்பிட்டதுண்டா?

அவர் கல்லாக அப்படியே உட்கார்ந்திருந்தார். பையனுக்கு அழுகை வந்தது

"இதோ பார்! நீ மட்டும் இப்போது சாப்பிடாவிட்டால் இந்தத் தூணில் முட்டி மோதி இறப்பேன்' என்று சொல்லிய படியே, தூணில் முட்டி அழுதான்.

அவனது களங்கமற்ற பக்தி விநாயகரை ஈர்த்தது. அவர் சன்னதியில் இருந்து எழுந்து வந்து, அவனைத் தடுத்து நிறுத்தினார். தும்பிக்கையால் நெற்றியில் வழிந்த ரத்தத்தைத் துடைக்க, காயம்பட்ட வடுவே மறைந்து விட்டது. நம்பியின் விருப்பப்படியே அத்தனை பொருட்களையும் ஒன்று விடாமல் சாப்பிட்டார்.

அவரிடம், "விநாயகா! எப்படியோ இன்று குருகுலம் செல்ல நேரமாகி விட்டது. நான் அங்கு சென்றிருந்தால் அவர் என்ன கற்றுக் கொடுத்திருப்பாரோ, அதை நீயே சொல்லிக் கொடேன்' என்றார் நம்பி.

அவனுக்கு அனைத்து ஞானத்தையும் போதித்து, மறைந்து விட்டார் விநாயகர்.

மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு வந்தான் நம்பி. பெற்றவர்கள் ஊர் திரும்பியதும் நடந்ததையெல்லாம் சொன்னான். அவர்கள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை. இந்த விஷயம் ராஜராஜசோழனுக்கு எட்டியது. அவன் நம்பியாண்டார் நம்பியின் இல்லத்துக்கே வந்துவிட்டான். விநாயகருக்கு நைவேத்யம் செய்து அவர் சாப்பிடுவதைக் கண்ணார கண்டு களிக்க வேண்டும் என்றான்.




பேசும்முன் கேளுங்கள்,
எழுதும் முன் யோசியுங்கள்,
செலவழிக்கும் முன் சம்பாதியுங்கள்

சில சமயங்களில் இழப்புதான் பெரிய ஆதாயமாக இருக்கும்

யாரிடம் கற்கிறோமோ அவரே ஆசிரியர். கற்றுக் கொடுப்பவரெல்லோரும் ஆசிரியர் அல்லர்.

நான் மாறும்போது தானும் மாறியும், நான் தலையசைக்கும்போது தானும் தலையசைக்கும் நண்பன் எனக்குத் தேவையில்லை. அதற்கு என் நிழலே போதும்!

அதன்படியே, கோவிலுக்குச் சென்று விநாயகரை சாப்பிட வைத்தார் நம்பி. மன்னனும், மக்களும் ஆச்சரியப்பட்டனர். அவரது மகிமையை உணர்ந்த மன்னன், தில்லையம்பலத்தில் பூட்டிக் கிடக்கும் அறையில் மூவர் பாடிய தேவாரமும், தொகையடியார்கள் வரலாறும் இருப்பதைச் சொல்லி, அவற்றை வெளியே கொண்டு வர ஆவன செய்யும்படி கேட்டுக் கொண்டான்.

அதன்படி, அவர்கள் அங்கு சென்று புற்று மண்டிக்கிடந்த அறையில் இருந்து ஓலைச்சுவடிகளை எடுத்து வந்தனர். நம்பியாண்டர் நம்பி அவற்றை 11 திருமுறைகளாகப் பிரித்தார். அவை இன்றும் நமக்கு இசையின்பத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றன.


குழந்தை போல களங்கமற்ற உள்ளங்களுக்கு கடவுள் தெரிவான் என்பதை நம்பியாண்டார் நம்பி வரலாறு உணர்த்துகிறது.

# செரிமானத்திற்கு உதவும் பயிற்சிகள்

செரிமானக் கோளாறு பெரும்பாலானோரைப் பாதிக்கும் பிரச்சினையாக மாறிவிட்டது. மாறிவரும் வாழ்க்கை முறையும் உணவு முறையும் செரிமானக் கோளாறுக்கு வழிவகுக்கின்றன. சிலர் இதிலிருந்து தப்பிக்க, தங்கள் விருப்பத்துக்கு மாத்திரைகளை எடுத்துக் கொள்வதுண்டு. ஆனால், மாத்திரைகளை அடிக்கடி உட்கொள்வது நல்லதல்ல என்கிறார்கள் மருத்துவர்கள். அப்படியானால், செரிமானக் கோளாறை எப்படிச் சமாளிப்பது? இருக்கவே இருக்கிறது யோகா.

செரிமானக் கோளாறுகளை எளிதாகத் தீர்க்கும் சில யோகாசனங்களைக் கற்றுத்தருகிறார் யோகா பயிற்சியாளர் பூ.குமரேசன்.

ஜெ. நிவேதா



**வக்ராசனா** Vakrasana

கால்களை நீட்டியவாறு நேராக அமர வேண்டும். இடது காலை மட்டும் மடித்து வைத்துக்கொள்ள வேண்டும். வலதுகையால் இடதுகாலின் பாதத்தைப் பிடித்தபடி இருக்கவேண்டும். அப்போது இடதுகையை பின்புறமாக ஊன்றித் தலையைத் திருப்பிப் பார்க்க வேண்டும்.

**பயன்கள்:** இரைப்பையில் சுரக்கும் அமில உற்பத்திக்கு இது அதிகம் உதவக்கூடியது. இதனால், அஜீரணக் குறைபாடுகள் விலகி செரிமானம் சீராகும்.

**பரிவிர்த திரிகோண ஆசனா**
(Parivirtha Trikona asana):



நேராக நின்று, இருகைகளையும் விரித்துக் கொண்டு கால்களையும் முடிந்தளவு விரித்துக்கொள்ள வேண்டும். இப்போது, வலதுகையால் இடதுகாலைத் தொடவேண்டும். இவ்வாறு செய்யும்போது, வலதுகையின் நேர்கோட்டில், இடதுகை மேல்நோக்கி இருக்கும். சில விநாடிகள் கழித்து, மறுதிசையில் இதனைச் செய்யவேண்டும்.

**பயன்கள்:** இதைச் செய்யும்போது, மார்புப் பகுதி விரிவடைவதைக் காணமுடியும். மூச்சு விடுவதில் பிரச்னை இருப்பவர்கள், ஆஸ்துமா நோயாளிகளுக்கு இது சிறந்த தீர்வு. செரிமானக் கோளாறுகளும் சரியாகும்.



**அர்தபவன் முக்தாசனா** (Ardha Pawan muktasana):

தரையில் மல்லாந்து படுத்துக்கொண்டு, இடது காலை மடக்கிக்கொள்ள வேண்டும். தொடைப்பகுதியை மார்புக்கு அருகே கொண்டுவந்து, இருகைகளையும் கொண்டு, மடக்கிய இடது காலைப் பிடித்துக்கொள்ளவும். அடுத்து, தலையை முன்னோக்கி நகர்த்தித் தாடைப்பகுதியால், மடக்கியிருக்கும் முழங்கால் முட்டியைத் தொட வேண்டும். சில விநாடிகள் வரை இதே நிலையில் இருந்துவிட்டு, பின்னர் வலதுகாலைக்கொண்டு இந்தப் பயிற்சியைச் செய்ய வேண்டும்.

**பயன்கள்:** உடலின் ரத்த ஓட்டம் சீராக்கப்படும். அனைத்துத் தசைகள், உறுப்புகள் சுறுசுறுப்பாகச் செயல்பட உதவும். சீரான செரிமானத்துக்கும் இடுப்புப் பகுதியின் தசைகளுக்கு வலுசேர்க்கவும் உதவும்.






**மண்டுகாசனா** (Mandukasana):

முட்டி போட்டபடித் தரையில் அமர்ந்துகொண்டு, கைவிரல்களை இறுக்கமாக மடக்கிக்கொள்ள வேண்டும். (அனைத்து விரல்களுக்கும் அடியில், கட்டைவிரல் இருக்க வேண்டியது அவசியம்). இப்போது மடக்கிய கைகளை வயிற்றின் கீழ்ப்பகுதியில் வைத்துக்கொண்டு தலை தரையில் படும்படியாகக் குனிய வேண்டும்.

**பயன்கள்:** கணையப் பாதுகாப்புக்கும் கணையச் சுறுசுறுப்புக்கும் இந்தப் பயிற்சி வழிவகுக்கிறது. அதனால் இன்சுலின் உற்பத்தி சீராகும். சர்க்கரை நோயாளிகளுக்கான மிகச்சிறந்த யோகா. செரிமானக் கோளாறுகளுக்கும் இது சிறந்ததாகும்.



**பவன்முக்தாசனா** (Pawanmuktasana):

தரையில் மல்லாந்து படுத்தபடி, இருகால்களையும் மடக்கி, தொடைகளை மார்புப்பகுதிக்கு அருகே கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டுவந்த கால்களைக் கைகளால் இறுக்கிப் பிடித்தபடித் தலையை, மடங்கியிருக்கும் முழங்கால் முட்டியை நோக்கி முன்னோக்கி நகர்த்த வேண்டும்.

**பயன்கள்:** செரிமானக் கோளாறுகளைச் சரி செய்வதுடன் பின்பக்கத் தசையின் வலிகளை இது குறைக்கும். வயிற்றுப்பகுதியின் ரத்த ஓட்டங்கள் சீராக இருக்க உதவி புரியும்.

**நவாசனா** Navasana








நேராக அமர்ந்துகொண்டு, இரு கால்களையும் மேல்நோக்கித் தூக்க வேண்டும். பிறகு கைகள், முழங்கால், முட்டிப் பகுதியைத் தொடுமாறு வைத்து உடலை பேலன்ஸ் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யும்போது, முதுகு சற்றுப் பின்னோக்கி நகர்வது இயல்பே. உடலை சற்று பேலன்ஸ் செய்து கொண்டு, கைகளை விலக்கி கால்முட்டிக்கு அருகில் கையை நேராக நீட்ட வேண்டும்.

**பயன்கள்:** பின்பக்கத் தசைகள் வலுப் பெறுவதற்கான இப்பயிற்சி, சிறுகுடல் மற்றும் பெருங்குடல் செயல்பாட்டை அதிகரிக்கும். இதனால், செரிமானம் சீராகும்.



**தனுராசனா** Dhanurasana

தரையில் குப்புறப் படுத்துக் கொண்டு இரு கால்களையும் மேல் நோக்கி வளைக்க வேண்டும். இப்போது கைகளால் கால் பாதத்தை இழுத்துப் பிடித்துக்கொள்ள வேண்டும். அதன்பிறகு, கால்களை முடிந்தவரை மெதுவாக விரிக்க வேண்டும். அதிகம் விரிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. கால்களை விரிக்கும்போது மார்புக்கு மேலுள்ள பகுதியும் மேல்நோக்கி எழுந்தால், பேலன்ஸிங் சரியாக இருக்கும்.

**பயன்கள்:** செரிமானம் மற்றும் பசியின்மைப் பிரச்னைகளுக்கு மிகச்சிறந்த தீர்வாக இருக்கும். மாதவிடாய் பிரச்னை இருக்கும் பெண்களும் எடை குறைக்க விரும்புபவர்களும் இதனைத் தொடர்ந்து செய்து வருவது நல்ல தீர்வைத் தரும்.

**கவனம்:**

செரிமானத்துக்கான யோகா பயிற்சிகள் என்பதால், சாப்பிட்டவுடன் இவற்றைச் செய்ய வேண்டும் என்று பொருளில்லை. காலை அல்லது மாலை வேளைகளில்தான் செய்ய வேண்டும்.

மாதவிடாய்க் காலங்களில் பெண்கள் யோகா பயிற்சி மேற்கொள்ள வேண்டாம். அடைபட்ட அறைகளுக்குள் யோகா செய்யக் கூடாது. நல்ல காற்றோட்டமான பகுதியில் செய்ய வேண்டும். ஒவ்வோர் ஆசனத்தையும், இரு திசைகளிலும் செய்து பழக வேண்டும். உதாரணமாக, முதலில் வலதுபக்கம் செய்தால், சில

விநாடிகள் கழித்து இடதுபக்கம் செய்ய வேண்டும். அப்போதுதான் உடலுக்குச் சம அளவு பேலன்ஸிங் கிடைக்கும்.

வெறும் தரையில் அமர்ந்தபடி யோகா செய்வது தவறு. மிருதுவான ஒரு விரிப்பின்மேல் அமர்ந்து செய்ய வேண்டும்.

ஒவ்வோர் ஆசனத்துக்கும் இடையில் மூச்சை நன்றாக உள்ளிழுத்து விட வேண்டும். மூச்சு வாங்கும்படியான சூழலில் யோகா செய்வது மிகவும் தவறு.

---

( 34ஆம் தொடர்ச்சி... )

எதிர்காலத்தில் உலகம் பாலைவனமாக மாறும் அபாயம் உள்ளது.

எனவே, எதிர்கால தண்ணீர்த் தேவையை கருத்தில் கொண்டு சந்திரன், செவ்வாய் கோளில் மனிதன் உயிர் வாழ முடியுமா, தண்ணீர் உள்ளதா என்று விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

உலகத்தில் 97.5 சதவீதம் உப்பு சுவை கொண்ட நீர் உள்ளது. மீதமுள்ள 2.5 சதவீதம் சுத்தமான நீர். இதில் 2.24 சதவீதம் துருவ பகுதிகளில் பனிப்பாறை களாகவும், பனிக்கட்டிகளாகவும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

எஞ்சியுள்ள 0.26 சதவீத தண்ணீரை தான் குடிநீராகவும், விவசாயத்துக்கும் பயன்படுத்தும் நிலை உள்ளது. மக்களின் தேவையை இந்த தண்ணீர் பூர்த்தி செய்வது கேள்விக்குறிதான்.

உலகில் கிடைக்க கூடிய சொற்ப அளவு குடிநீரும் கழிவுகளால் மாசடைந்து வருகிறது. ஆண்டுதோறும் 40 ஆயிரம் தொன் கழிவுகள் நீரை மாசுபடுத்தி வருகின்றன. நிலத்தடி நீரும் உறிஞ்சப்பட்டு நீர்வள ஆதாரங்கள் பாதிக்கப்பட்டு வருகிறது. உலகம் முழுக்க தினமும் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் சுகாதாரமற்ற தண்ணீரால் ஏற்படும் தொற்று நோயால் இறப்பதாக புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

மாசுபட்ட குடிநீரால் டைபாய்டு, அமிபியாசிஸ், ஜியார்டியாசிஸ், அஸ்காரி யாசிஸ், கொக்கிப்புழு, தோல் நோய், காது வலி, கண் நோய், வயிற்றுப் போக்கு உள் ளிட்ட நோய் தாக்குதல்கள் ஏற்படுகிறது.

நிலத்தடி நீரை பாதுகாக்க வேண்டி யது. நீர் ஆதாரங்களை காக்க வேண்டியது. குடிநீர் மாசுபடாமல் இருக்க உதவுவது மக்களின் சமுதாய கடமையாகும். தண்ணீர் மாசு படாமல் பாதுகாப்போம். நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவோம்.

நீர்நிலைகளை பாதுகாப்போம். தண்ணீர் வீணாவதை தடுப்போம் நிறைவேற்றப் பாடுபடுவோம்.

# வெற்றியின் வழி

அர்ஜுனன் ஒருநாள்.. கிருஷ்ணரிடம் கேட்டான்.....?

தருமரை விட கர்ணனையே பெரிய கொடையாளி என்று மக்கள் ஏன் கருதுகிறார்கள்? இரண்டு பேருமே எதையும் இல்லை என்று சொல்லாமல் கொடுப்பவர்கள்தானே...? கர்ணனுக்கு மட்டும் ஏன் அதிக புகழ் ?" சரி, என்னுடன் வா. காட்டுகிறேன் என்று கூறி அர்ஜுனனை அழைத்துச் சென்றார் கிருஷ்ணன். இருவரும் பிராமணர்களைப் போல வேடமிட்டுக்கொண்டு தருமரின் அவைக்குச் சென்றார்கள். யாகம் நடத்த சந்தனக் கட்டைகள் வேண்டும் என்றார்கள். மன்னர் தருமர் உடனே சந்தன மரங்களை வெட்டிக் கொண்டு வருமாறு தன் ஆட்களை நாடு முழுவதும் அனுப்பினார். ஆனால் அப்போது மழைக்காலம். கொண்டு வந்த மரங்கள் எல்லாம் ஈரமாகி இருந்தன. அவற்றைக்கொண்டு யாகம் நடத்த முடியாது. இருவரும் கர்ணனிடம் சென்று அதே கோரிக்கையை வைத்தார்கள். கர்ணன் யோசித்தான். "அடாடா... இது மழைக்காலம். இந்த மழைக்காலத்தில் காய்ந்த கட்டைகள் கிடைக்காது. அதனால் என்ன... கொஞ்சம் பொறுங்கள்" என்றான். கோடரியை எடுத்து வந்தான். மாளிகையின் கதவுகளும் சன்னல்களும் சந்தன மரத்தால் செய்யப்பட்டவை. கர்ணன் அவற்றை வெட்டி எடுத்துக் கொடுத்தான். இருவரும் திரும்பி வரும்போது கிருஷ்ணர் கேட்டார். "இப்போது புரிகிறதா அர்ஜுனா... தருமரிடம் கதவையும் ஜன்னல்களையும் உடைத்துத் தாருங்கள் என்று கேட்டிருந்தால் அவரும் உடனே தந்திருப்பார்தான். ஆனா. அவர் தானாகவே அவ்வாறு சிந்திக்கவில்லை.

ஆனால் கர்ணன்... நாம் கேட்கவே இல்லை. அவனாகவே யோசித்துச் செய்தான். யுதிஷ்டிரர் கொடுப்பது தர்மம். கர்ணன் கொடுப்பது விருப்பம் எந்த வேலையையும் விருப்பத்துடன் செய்தால் அது போற்றப்படும் செயலாகும்" இதிலிருந்து தெரிவது என்ன? கடமைக்காகவோ, நிர்ப்பந்தமோ, தேவையோ, எதுவாக இருந்தாலும் செய்வதை விருப்பத்துடன் செய்யுங்கள். வெற்றி பெறுவீர்கள்.

## மகளிர் தினம்

08.03.2018




தோள்கொடுக்கும் தோழியாய்,
வளம் சேர்க்கும் மனைவியாய்,
அறிவுரைக்கும் அன்னையாய்,
பரிந்துரைக்கும் மருமகளாய்,
குடும்பத் தலைவியாய்,
இடர் வருகையில் மதியூகியாய்,
வலம் வரும் நீ,
வயது பலவானாலும்

அனைத்து மகளிர்களுக்கும் "அமுதநதி" யின் மகளிர்தின வாழ்த்துக்கள்!

## மனிதனாக வாழ வழிகள்

| | |
|---|---|
| மிகவும் மதிப்புக்குரியவர்கள் | தாய், தந்தை |
| மிகமிக நல்ல நாள் | இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | பணிவு |
| மிகவும் வேண்டாதது | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | நம்பிக்கை |
| மிகக் கொடிய நோய் | பேராசை |
| மிகவும் சுலபமானது | குற்றம் காணல் |
| தரமற்ற குணம் | பொறாமை |
| நம்பக்கூடாதது | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | அதிக பேச்சு |
| செய்யக்கூடாதது | நம்பிக்கைத் துரோகம் |
| செய்யக்கூடியது | உதவி |
| உயர்வுக்கு வழி | உழைப்பு |
| நழுவவிடக்கூடாதது | வாய்ப்பு |
| பிரியக்கூடாதது | நட்பு |
| மறக்கக்கூடாதது | நன்றி |
| ஒவ்வொரு நிமிடமும் இருக்கவேண்டியது | இறைபயம் |

நகுலேஸ்

# மெல்லிசை கேளுங்கள்

“இசை கேட்டால் புவி அசைந்தாடும்...” என்ற புடல் வரிகளை கேட்டிருக்கலாம், அரக்க குல மன்னன் ராவணனின் இசைக்கு மயங்கி கற்பாறையே உருகியதாக புராணங்கள் கூறுகின்றன.



இது தவிர குறிப்பிட்ட ராகத்தை இசைப்பதன் மூலம் மழை பொழிய வைக்க முடியும் என்ற நம்பிக்கையும் உள்ளது. மேலும் நோய்களை குணமாக்கும் சக்தி இசைக்கு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

கர்நாடக இசையில் குறிப்பிட்ட சில ராகங்களையும் அது தொடர்பான இசைக்கோர்வைகளை கேட்பதன் மூலம் நோய்களை குணமாக்க முடியும் என்று

தமிழகத்தில் நடைபெற்ற ஆய்வுகள் தெரிவித்தன. இத்தாலி நாட்டு விஞ்ஞானிகளும் இதை தங்களது ஆய்வுகள் மூலம் உறுதி செய்துள்ளனர்.

இங்கு பவியா நகரில் உள்ள பல்கலைக்கழகத்தில் மருந்துகள் பிரிவு பேராசிரியர் லூசியானோ பெர்னார்டி தலைமையில் இது தொடர்பான ஆய்வுகள் நடைபெற்றது.

அப்போது வெளியான தகவல்கள் வருமாறு:-


இசை கேட்கும்போது இருதய நோய் படிப்படியாக குணம் ஆகிறது. குறிப்பாக மாரடைப்புக்கு பிறகு நோயாளி குணமாக மெல்லிசை பெரிதும் உதவுகிறது. மனம் அமைதி பெற இந்த மெல்லிசை வழிகாட்டுகிறது.

ஸ ரி க ம ப த நி இசையே மருந்து என்பது தொடர்பான இந்த ஆய்வுக்கு ஆரோக்கியமான உடல் நிலையில் உள்ள 24 பேர்களை தேர்வு செய்தனர். இவர்களில் ஒரு பிரிவுனருக்கு ஹெட்போன் மூலம் மெல்லிசையே தினமும் குறிப்பிட்ட நேரம் கேட்கச்செய்தனர்.. அப்போது இரு தரப்பினரின் ரத்த அழுத்தம் உள்பட பல்வேறு மருத்துவ அளவீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன.

இதில் அதிரடியான இசையை கேட்டவர்களுக்கு தோலின் அடியில் உள்ள ரத்தக்குழாயில் சுருக்கம் ஏற்பட்டது . இருதய. துடிப்பு அதிகரித்து ரத்த அழுத்தம் உயர்ந்தது. மூச்சு விடுவது ஒழுங்கற்ற நிலையில் காணப்பட்டது.

அதே நேரத்தில் மெல்லிசையை மிதமான சத்தத்தில் கேட்டவர்களுக்கு இருதய துடிப்பு சீராக இருந்தது. அவர்களது ரத்தக்குழாய்கள் விரிவடைந்த நிலையில் ரத்த ஓட்டம். ரத்த அழுத்தம் சீராக காணப்பட்டது. இதே போன்ற ஆய்வு சாதாரண நோயாளிகளிடம் நடத்தப்பட்டது.

இதில் மெல்லிசை கேட்டவர்களுக்கு நோய் குணமாகும் வேகம் அதிகமாகக் காணப்பட்டது. எனவே சத்திரசிகிச்சைக்குப் பிறகு நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்படும். உடல்நல மேம்பாடு மருத்துவத்தின் போது மெல்லிசை முக்கிய பங்கு வகிப்பதை ஆய்வுகள் உறுதி செய்துள்ளன.



உலகின் பணக்கார நாடுகள் எல்லாம் கட்டுமானத் தொழிலில் கொடிகட்டிப் பறக்கிறார்கள்.உலகில் உயரமான கட்டிடம் எங்களிடம்தான் உள்ளது என்று சொல்வதற்காகவே கட்டப்படும் விண்ணை முட்டும் கட்டிடங்களுக்கு அவர்கள் அள்ளி வீசும் டாலர்கள், யுரோ, திர்ஹம், ரியால் அளவிட முடியாது. ஆனால் அவற்றை கட்டுவதற்காக இரவும் பகலும் உழைக்கும் கட்டுமானத் தொழிலாளர்கள் பெரும்பாலும் நம்மவர்களே.. நம் மூளையும், அயராத உழைப்பும், சிந்தும் வியர்வையும் தான் அவர்களை ஜொலிக்க வைக்கிறது. ஆனால் வெள்ளைக்காரன் எமது நாட்டுக்கு வருவதற்கு முன்பு உலகத்துக்கே கட்டுமானத் தொழிலில் நம்மவர்கள் தான் முன்னோடியா இருந்ததாக வரலாறு சொல்கிறது...

# பெரிய கோயிலும் சாய்ந்த கோபுரமும்



உதாரணத்திற்கு...உலகின் எட்டு அதிசயங்களில் ஒன்றாக கருதப்படும் இத்தாலியில் உள்ள பைசா கோபுரம் மொத்தம் மூன்று கட்டங்களாக 177 வருடங்களாக கட்டப்பட்டதாம்.. இவ்ளோ உயரமா கட்டப்போறோமே....இதன் கீழே உள்ள மண்ணின் தன்மையை சோதிக்கவேண்டும் என்ற அடிப்படை விஷயம் கூடவா தெரியாமல் இருக்கும். கட்டிய கொஞ்ச நாட்களில் கொஞ்ச கொஞ்சமா சாய, பிறகு இரண்டாம் தளம், மூன்றாம் தளம் அமைத்து மொத்தமாக சாய்ந்து விடாமல் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். உலகில் மிக கேவலமான கட்டுமானத்திற்கு எடுத்துக்காட்டு இந்தக் கட்டிடம். ஆனால் இது உலக அதிசயப் பட்டியலில் இன்றும் இருப்பது தான் மாபெரும் வியப்பு.

நம் தஞ்சையில் கம்பீரமாக நிற்கும் 216 அடி தஞ்சைப் பெரிய கோயில் வெறும் 12 ஆண்டுகளில் கட்டப்பட்டதாம். கட்டிடக் கலையில் உலகையே மிரளச் செய்யும் இந்தக்கோயில் ராஜராஜசோழனால் கட்டி முடிக்கப்பட்டது. இந்தக் கோபுரத்தில் உள்ள ஒரே ஒரு பாறை மட்டும் 80 தொன் (80 ஆயிரம் கிலோ) எடை கொண்டதாம். கிரேன், புல்டோசர், உட்பட எந்தவித தொழில் நுட்பமும் இல்லாத அந்தக் காலத்தில் கட்டப்பட்டு ஆயிரம் வருடங்களுக்கு மேல் கம்பீரமாக காட்சியளிக்கும் இந்தக் கோபுரம் அதிசயப் பட்டியலில் இடம் பெறாததே ஒரு அதிசயம் தான்.

கட்டுமானத்தொழிலில் நாம் தான் "கிங்" என்று சொல்வதற்கு இதைவிட வேறென்ன உதாரணம் வேண்டும்?....

# குட்டிக்கவி 01



தற்கொலை

இனிய வாசகர்களே!
ஒவ்வொரு இதழிலும் குட்டிக்கவி யாக வரும் படத்திற்கு பத்து வரிகளில் குட்டிக்கவிதையொன்றை எழுதி எமது வழமையான முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள். தொடர்ந்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும்.

## மதுவின் பரிசு மரணம்!

உள்ளே கருகும் உடல்...
மெல்ல உருகும் உயிர்...
பணத்தைக் கரியாக்கும் மது
ஊடுருவி உயிரினைக் குடிக்கும்..!!

சித்தம் மதிமயங்கும்...
புத்தி பேதலிக்கும்...
குடும்பம் தவிதவிக்கும்
வீதியில் உடல் கிடக்கும்..!!

அறிவு முற்றும் மறையும்...
ஆற்றல் எல்லாம் தளரும்...
அன்பின் நல் உறவுகளும்
அருகில்லாமல் தொலையும்..!!

உணர்வுகள் மொத்தம் மரத்தும்...
உறவுகள் உறவை வெறுத்தும்...
அழகிய இனிய வாழ்க்கை
அர்த்தம் இன்றி அழிந்தொழியும்..!!

மது வாழ்வை மாயம் செய்யும்...
மரணத்தை பரிசாக வழங்கும்...
மதி கெட்டு மானமிழந்தும் மனிதம்...
மது பின்னால் மண்டியிட்டலைகிறதே..!!



வேலணையூர் ரஜிந்தன்





The Dish Doctors
Lanka Sat Systems
Over 20 years experiance in Satellite Field
SUN DIRECT
airtel digital TV
dishtv
VIDEOCON d2h
Digital DTH Service
true visions
TATA Sky
SATELLITE TELEVISION
BIG TV
DTH SERVICE
Satellite Receivers Sales
Installation, Service & Recharge
Satellite Systems Installation and Desining of SMATV / MAT / CCTV / DTH SYSTEMS All Types of Satellite Dish Antennas, TV Antennas and Accessories, Cable TV Assessories & Recharge for All DTH Items.
மின்சார உபகரணங்கள் உடனுக்குடன்
பழுதுபார்த்து தரப்படும்
#64, 1st Floor, New Bus Stand Complex, Vavuniya.
Tel: 024 2227499, Mob: 077 3201764
E-mail: newlankasat@ymail.com. web: www.lankasatsystems.com
P.Kanagaraj
Dish Doctor




WES
World • Express • Services

# WORLD EXPRESS SERVICES

INTERNATIONAL \ LOCAL COURIER SERVICE

குறைந்த செலவில் துரித கதியில் உங்கள் உறவினர் நண்பர்களுக்கு பரிசுப் பொருட்களையும் பொதிகளையும் அனுப்பிவைக்க எங்களை நாடுங்கள்

**எமது சேவையின் சிறப்பியல்புகள்**

விரைவானதும் துரிதமானதுமான Door to Door சேவைகள்.

எந்தவொரு நாட்டுக்கும் 3 அல்லது 4 வேலைநாட்களில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்

தேவையேற்படின் உங்கள் இடங்களுக்கே வந்து பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும்

யாழ் மற்றும் அனைத்து உள்நாட்டுப் பிரதேசங்களுக்கும் துரித கதியிலான சேவை



நாடளாவிய எமது கிளை நிறுவனங்களில் இச்சலுகையை பெற்று மகிழங்கள்

இல:180/5, புகையிரதநிலையவீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா. 024 4903200 / 024 4928455

Head Office: No:338, Aluth Mawatha Road, Colombo 15. Tel: 0112 520 894 / 0114 345 966

**OUR BRANCHES**

| Kotahena: | Negombo: | Batticaloa: | Jaffna: |
|---|---|---|---|
| No:42, Kotahena Street, Colombo 13, Tel: 011 24 24 221 | No: 95, Sea Street, Negambo, Tel: 031 222 4544 031 493 6899 | No:419, Trinco Road, Batticaloa. Tel: 065 2228 995 065 4927 477 | No: 295, Palali Road, Jaffna. Tel: 021 2220 356 021 4923 677 |

**Hotline: 0773 870 952 / 0114 640 650**